# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor



86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385



Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 31 September 2018 Issue - 9


ஆசிரியர் உரை

## தோமாவிடமிருந்து...

இத்தலைப்பைப் பார்த்த மாத்திரத்தில், என்னது தோமாவா? தோமாவிடமிருந்தா? அவன்தான் ஒரு சந்தேகப்பேர்வழி ஆயிற்றே என்று நீங்கள் முகம் சுளித்து முணுமுணுப்பது காதில் விழுகிறது. முதல் மூன்று நற்செய்தியாளர்களும் இவனுடைய பெயரைச் சீடர்களின் பட்டியலில் இடம் பெறச் செய்வதோடு நிறுத்திக் கொண்டு, வேறெதுவும் பெரிதாகச் சொல்லாத நிலையில் இவனிடமிருந்து கற்றுக்கொள்வதற்கு என்ன இருக்கப்போகிறது என்று எண்ணுவதும் புரிகிறது. என்ன செய்வது? தோமா போன்ற சிலரைக் கிட்டப் போய் உற்று நோக்கும் போது தான், அவர்களைப் பற்றிய நமது பார்வை தவறானது என்று தெரிவதோடு அவர்களும் நமக்கான பக்திப் பாடங்களைக் கற்றுக் கொடுக்கத் தகுதியானவர்களென்று கண்டு கொள்ள முடிகிறது. இம் மாதத்திற்கான நம் தோமா இவ்வகையைச் சார்ந்தவனே. ஆனால், நாமெல்லாரும் இவனுக்குச் சந்தேகப்பேர்வழி என்னும் பட்டத்தைச் சூட்டி, அப்பழியைக் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகச் சுமந்து திரிய அனுமதித்துவிட்டோம். ஒரு வகையில் இந்தத் தோமா, பாவமே!

திதிமு என்னப்பட்ட தோமாவின் மீது இப்பழி எப்படி வந்தது? பரலோக தேவனின் வல்லமையான செயலின்படி உயிரோடு எழுந்த இயேசுவானவர், பல கட்டங்களில் தம்மை உயிருள்ளவாராக வெளிப்படுத்தினார். அப்படி ஒரு சமயம் தன்னுடைய சீடர்களுக்குத் தம்மை வெளிப்படுத்திய போது, திதிமு என்னப்பட்ட தோமா அங்கு இல்லை. அவன் திரும்ப வந்தவுடன், சீடர்கள் **கர்த்தரைக் கண்டோம்** என்ற செய்தியை தோமாவோடு பகிர்ந்து கொண்டனர். அப்பொழுது தோமா: அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக்

காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான் [யோவான் 20 : 25]. கர்த்தரைக் கண்டோம் என்று மற்ற சீடர்கள் சொன்னபோது, தோமா அதை அப்படியே ஏற்றிருந்தால் நன்றாகத்தான் இருந்திருக்கும், சந்தேகமில்லை. ஆனால், சீடர்களுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளாத குற்றத்திற்காக இப்படி ஒரு பழியா என்பதை ஏற்க மனம் ஒப்பவில்லை. ஒருவேளை, வேறெந்த சீடனும் இப்படி நடந்து கொள்ளவில்லை என்று வேத ஆதாரங்களைக் காட்ட முடிந்தால், தோமாவைத் தனிமைப்படுத்துவதில் நியாயம் இருக்கும். ஆனால், யதார்த்த நிலை அப்படியில்லையே! ஆ, அப்படியா என்கிறீர்களா? கவனியுங்கள். வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளாகிய வாரத்தின் முதல் நாள் அதிகாலையிலே இயேசு உயிரோடே எழுந்த பிறகு, மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானார் [மாற்கு 16:9]. இப்பரவசச் செய்தியை, இயேசுவினிமித்தம் துக்கப்பட்டு அழுது கொண்டிருந்த சீடர்களுக்குப் போய் அவள் அறிவித்தாள் [21:10]. அவர் உயிரோடிருக்கிறார் என்றும், அவளுக்குக் காணப்பட்டார் என்றும் அவர்கள் கேட்ட பொழுது **நம்பவில்லை** [21:11]. நம்பாத இக்கூட்டத்தில் தோமா உட்பட 11 பேரும் இருந்தனர் [லூக்கா.24:11] விளங்குகிறதா? அதன் பின்பு அவர்களில் இரண்டு பேர், எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போகும் போது. அவர்களுக்கு மறுரூபமாய் தரிசனமானார். அவர்கள் போய் உயிர்த்த இயேசுபற்றி அறிவித்தபோது அவர்களையும் **நம்பவில்லை** [வசனம்13]. இதற்குப்பிறகு, பதினொருவரும் பந்தியிருக்கையில் அவர்களுக்கு இயேசு தரிசனமாகி, அவர்கள் நம்பாமற் போனதிமித்தம் அவர்களின் அவிசுவாசத்தையும், இருதயக்கடினத்தையும் குறித்தும் கடிந்துக்கொண்டார் [மாற்கு 16:14]. புரிகிறதா? உயிர்தெழுந்த செய்தியை நம்பாமற் போன குற்றம் தோமாவின் மீது மாத்திரம் சுமத்தப்படக்கூடாது. **மற்ற சீடர்கள் நம்பிக்கைப்பேர் வழிகளும் அல்ல, தோமா சந்தேகப்பேர்வழியும் அல்ல.**

சரி, நமது வழக்கத்தின்படி, இந்தத் தோமா பற்றின பின்னணித் தகவல்களைச் சேகரிக்கலாமா என்று பார்த்தால் அதற்கான ஆதாரங்கள் அதிகமாக இல்லை. யோவான் நற்செய்தியாளன் மட்டுமே கொஞ்சம் கை கொடுக்கிறார். இந்த யோவான் கொடுக்கும் முதல் தகவல், மரித்து நாலுநாள் ஆன பெத்தானியா ஊர் லாசருவை எழுப்பச் சென்றபோது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அப்பொழுது திதிமு என்னப்பட்ட தோமா மற்ற சீடர்களை நோக்கி : அவரோடே கூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்றான் [யோவான் 11:16]. இயேசுவுக்காக மரிக்கவும் இவன் தயாராய் இருந்துள்ளான். பிறகு யோவான் 14:5–ல், **தோமா அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான்** [யோவான் 14:5]. இதை அடுத்து யோவான் 20–ம் அதிகாரத்தில் [24,25] நாம் பட்டம் கட்டின பகுதி வருகிறது.

இரட்டை அல்லது இரட்டையான என்று பொருளைக் கொண்ட நம் தோமா பற்றி வேதாகமம் அல்லாத பிற சரித்திரம் கொஞ்சம் கூடுதல் தகவல்களைக் கொடுக்கிறது. ஆனால், அவைகளுக்கெல்லாம் வேதாகம ஆதாரம் இல்லையென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இயேசு ஆண்டவர் இப்பூமியில் அவதரிக்கத் தெரிந்து கொள்ளப்பட்ட குடும்பத்தின் தொழிலான தச்சுத் தொழில்தான் இவனுக்கும் தொழிலாக இருந்துள்ளதாகத் தெரிகிறது. நற்செய்தி ஊழியத்தினிமித்தம் அரபிக்கடல் வழியாக இந்தியாவிற்கு வந்து உயிரோடெழுந்த இயேசுவைப் பிரசங்கித்துப் பிறகு இரத்த சாட்சியாக இந்தியாவிலேயே மரித்தான் என்றும் நம்பப்படுகிறது. வேறு தகவல், அவன் பெர்சியா நாட்டுக்குச் சென்று அங்கு ஊழியம் செய்தான் என்பது.

சரி, நாம் வெளிப்படுத்தப்படாதவைகளுக்குள் அதிகம் செல்லுவதை இதோடு நிறுத்திவிட்டு, நமக்குச் சொல்லப்பட்டவைகளிலிருந்து, எப்படிப்பட்ட பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும் என்று முயற்சிப்போம்.

**1.தெரியாததைத் தெரியாது என்று ஒத்துக்கொள்ளத் தயங்கவில்லை**

சந்தேகப்பேர்வழி என்னும் பழியை சுமந்து திரியும் தோமாவிடமிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், தெரியாததைத் தெரியாது என்று ஏற்றுக்கொள்ளும் பக்குவம் வேண்டும் என்பது.

எல்லாம் தெரிந்தவன் என்று உலகில் யாரும் இல்லை. ஒரு வேளை, ஒரு துறையில் ஒருவன் நிபுணத்துவம் பெற்றிருக்கிறான் என்று வைத்துக்கொண்டாலும் கூட, அதே துறையில் அவனுக்குத் தெரியாத சில காரியங்கள் இருக்கவே செய்யும். யதார்த்த நிலை இப்படியிருக்கும் போது, ஒன்று தனக்குத் தெரியாது என்று ஏற்றுக் கொள்வதற்கு ஏன் பெரும்பாலான மக்கள் விரும்புவதில்லை யென்பது புரியவில்லை. இக்காரியத்தில் இயேசுவின் சீடர்களும் விதிவிலக்காக இல்லை. ஆனால், பழிசுமக்கும் நம் தோமா, விதிவிலக்காகச் செயல்பட்டு நமக்குத் தேவையான ஒரு முன்மாதிரியை வைத்துச் சென்றுள்ளான்.

ஆம், இயோசுவானவர் காட்டிக் கொடுக்கப்பட்ட ஓர் இரவு நேரம் தான் நேசித்த சீடர்களோடு இயேசு போஜன பந்தியிருந்தார். அப்பொழுது, மனத்தாழ்மை குறித்த ஒரு மாபெரும் பாடத்தைத் தன் அதிர்ச்சி செயல் மூலம் சீடர்களுக்குக் கற்பித்துவிட்டு (13:4-15) தொடர்ந்து அவர்களோடு உரையாடினார். ஒரு கட்டத்தில், பிள்ளைகளே, இன்னும் கொஞ்சகாலம் நான் உங்களுடனே கூட இருப்பேன், நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும், நான் போகிற இடத்துக்கு உங்களால் வரக்கூடாது (13:33) என்றார். இந்த அறிவிப்பின் மூலம் அதிர்ந்து போன சீடர்களை இயேசு தைரியப்படுத்துவதை தான் நாம் 14-ம் அதிகாரத்தில் காண முடியும். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்று தான் அந்த

அதிகாரமே ஆரம்பமாகிறது. தொடர்ந்து வரும் மூன்றாம் வசனத்தில், **நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கும் இடத்தில் நீங்களும் இருக்கும்படி, நாள் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்** என்று நம்பிக்கையூட்டினார்.

இதைத் தொடர்ந்து தான் 4–ம் வசனத்தில், **நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள் வழியையும் அறிந்திருக்கிறீர்கள்** என்றார். இயேசு இந்த வார்த்தைகளைப் பேசின போது, எப்போதும் துடுக்காகப் பேசும் பேதுரு உட்பட அனைவரும் அங்கே இருந்தனர். ஆனால், எல்லோரும் கப்சிப். மற்றவர்களுக்கு இயேசு சொன்ன வழி தெரிந்திருந்ததால் அமைதி காத்தனர் என்றும் நினைக்க முடியவில்லை. எப்படியெனில், தோமா இங்கே எல்லோர் சார்பாகவுமே பேசியுள்ளார். **போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம்** என்று. உண்மையில் இக்கேள்விக்காக நாம் தோமாவுக்கு மிகுந்த நன்றி சொல்ல வேண்டும். தோமாவின் இக்கேள்விக்கான பதில் தான் இன்றளவும் கிறிஸ்தவ உலகின் உச்சத்தில் இருக்கும் வசனமாகிய, **நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்** என்பது (யோவான் 14:6). இருக்கின்ற அநேக வழிகளில் என்னுடைய வழியும் ஒன்று என்று இயேசு அங்கே கூறவில்லை. மாறாக, **நானே வழி, நானே சத்தியம், நானே ஜீவன்** என்று பகிரங்கப்படுத்தினார்.

அன்பானவர்களே! தோமாவின் செயல்பாட்டை நாம் கவனிக்க வேண்டும். தோமா எவ்விதத் தயக்கமும், தாமதமும் பயமும் இல்லாமல் இயேசு ஆண்டவரிடமே இக்கேள்வியைக் கேட்டுள்ளான். ஆனால், கிறிஸ்தவத்தில் இன்றைக்கு என்ன நடக்கிறது? ஆன்மீகம் என்ற பெயரில் யார் என்ன சொன்னாலும் அப்படிச் சொல்லப்படுவது புரிந்தாலும், புரியாவிட்டாலும் அதை ஏற்றுக்கொள்வதற்கு ஒரு கூட்டம் தயாராக இருக்கிறது. அதுவும், அவர்கள் மதப் பிரபலங்களாக இருந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். போடு தோப்புக்கரணம் என்றால், **எண்ணிக்கோ** என்பார்கள். மார்க்க மோசடிக்காரர்களுக்கு இந்த **விளங்காத கூட்டம்** தான் பெரிய முதலீடு. ஆனால், தோமா இயேசு ஆண்டவரிடம் எப்படி எதிர் கேள்வி கேப்பது என்று எண்ணவில்லை. எனக்கு விளங்காத ஒன்றைப் பற்றிக் கேட்பதற்கு, எனக்குப் போதிப்பவர் யார் என்று நான் பார்க்கத் தேவையில்லையென்பதே அவன் நிலைப்பாடு. இன்றைய கிறிஸ்தவம் அழிவின் பாதையிலிருந்து திரும்ப வேண்டுமானால் இந்தத் தோமாவின் மனநிலை அவசரமாகத் தேவைப்படுகிறது. இப்படிக் கேட்கும் போதுதான், தெரியாதவைகளைத் தெரிந்துகொள்ள முடிகிறது என்பதைத் தாண்டி, ஆவிக்குரிய ரீதியில் மகத்தானவைகளும் வெளிப்படுகிறது.

தோமாவின் மனநிலை அவசியம் தான் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு எத்தியோப்பிய மந்திரி. தான் வாசித்த வேதவாக்கியங்களின் கருத்து தெரியாதபோது (அப்.8:30), தான் ஒரு பெரிய பதவியில் உள்ளவன், ஆகவே, தெரியாது என்று சொல்லுவது கேவலம் என்று நினைக்காமல், பிலிப்பு ஊழியனை நோக்கி, தீர்க்கதரிசி யாரைக் குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக் குறித்தோ, வேறொருவரைக் குறித்தோ? எனக்குச் சொல்லவேண்டும் என்று தாழ்மையாய் கேட்டுக் கொண்டான் (அப்.8:34). அப்படிக் கேட்டதினிமித்தம் இரட்சிப்பின் வழியைத் தெரிந்து கொண்டு, அதற்குத் தன்னை கீழ்ப்படுத்தி, ஞானஸ்நானம் பெற்று, சந்தோஷத்தோடே தன் வழியே போனான் (அப். 8:35–39).

ஆகையால், இயேசு கிறிஸ்து பற்றிய உண்மைகளை அறிந்து கொள்ளவும், அவருடைய சுவிசேஷத்தின் உண்மைகளைப் புரிந்து ஏற்றுக்கொள்ளவும் தோமாவின் மனநிலையைப் பெற்றுக் கொள்ளத் தீர்மானிப்போம்.

II. **உண்மையென்று ஏற்றுக்கொள்ள ஆதாரம் கேட்கத் தயங்கவில்லை**

சந்தேகப்பேர்வழி என்னும் பழியைச் சுமந்து திரியும் தோமாவிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், ஒன்றை ஏற்றுக்கொள்வதற்கு ஆதாரம் கேட்கவேண்டும் என்பது.

உலகப்பிரகாரமான காரியங்களில் ஒன்றை நம்புவதற்கும், ஏற்றுக் கொள்ளுவதற்கும் ஆதாரம் கேட்கும் மக்கள், ஆன்மீகக் காரியங்கள் என்று வரும் போது, எவ்வித சங்கோஜமும் இல்லாமல் அப்படியே அட்சரம் பிசகாமல் ஏற்றுப் பின்பற்றத் துடிக்கின்றனர். கேட்டால், அது முன்னோர்களின் வழி, பாரம்பரியம் பெரியவர்கள் சொல்லிக் கொடுத்தது, குடும்பப் பழக்கம், சபைக் கட்டுப்பாடு என்று எது எதையோ சொல்லி சப்பைக் கட்டுக் கட்டுவர். ஆன்மீக வாழ்வின் சீரழிவு இப்படிப்பட்ட மனநிலையிலிருந்து தான் உற்பத்தியாகிறது. மரியாதை கொடுப்பதும், மக்குத்தனமாக நடந்து கொள்வதும் ஒன்றல்ல. வேறுபாடு அறிந்து காரியமாற்றுவது அவசியம்.

நம் தோமா இக்காரியத்தில் தெளிவுள்ளவனாக நடந்துள்ளான் என்றே தெரிகிறது. தான் இல்லாத ஒரு சமயத்தில் உயிர்த்த இயேசு காட்சி தந்ததை மற்ற சீடர்கள் இவனுக்கு அறிவித்த போது, உங்கள் வார்த்தைகளில் எனக்குச் சந்தேகம் இருக்கிறதென்றோ அல்லது நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ளுவதில் எனக்குப் பிரச்சனை இருக்கிறது என்றோ அல்லது அப்படியிருக்க வாய்ப்பில்லை என்றோ அவன் சொல்லவில்லை. மாறாக, ஏற்று கொள்ளுவதில் எனக்கு எவ்விதச் சிக்கலும் இல்லை, ஆனால், எனக்கு ஆதாரம் வேண்டுமெறு கேட்டுள்ளான்.

நம் இயேசு ஆண்டவரும் இவனுடைய இந் நிலைப்பாட்டை மனிதர்களாகிய நாம் பழி சுமத்திப் பார்ப்பது போல் பார்க்கவில்லை என்றே தோன்றுகிறது. எப்படியெனில், தன்

உயிர்தெழுதலை நம்ப மறுத்த சீடர்களுக்குத் தான் மறுபடியும் தரிசனமான போது, அவர்களுடைய இருதயக் கடினத்தை குறித்துக் கடிந்து கொண்டவர் ( மாற்கு 16:14) தோமாவுக்கு இயேசு ஒரு வாரம் கழித்துத் தரிசனமான போது, அவன் கேட்டது போல அவனுக்குத் தன்னை வெளிப்படுத்தி, அதில் அவன் முழு திருப்திபட அனுமதித்து விட்டு அவன், என் ஆண்டவரே, என் தேவனே! என்று அறிக்கை செய்த பிறகே, லேசாக இடித்துக் காட்டினார், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்று. ஆக, ஆன்மீக காரியங்களில் ஆதாரம் கேட்பதற்கு இயேசுவின் அங்கீகாரம் உண்டு என்பது நமக்குத் தெரிய வேண்டும். ஆதாரம் கேட்பது அதிகப் பிரசங்கித்தனம் அல்ல. மாறாக, ஒன்றைப் பலமாக ஏற்றுச் செயல்படுவதற்கான அச்சாரமே ஆதாரம்.

அப்படியானால் அருமையானவர்களே, நம்முடைய ஆன்மீகக் காரியங்களில் நாம் எப்படிப்பட்ட செயல் பாடுள்ளவர்களாக உள்ளோம்? பக்தி சம்பந்தப்பட்ட, பரத்துக்கடுத்த காரியங்களை மற்றவர்கள் நம்மோடு பகிர்ந்து கொள்ளும்போது நாம் அதற்கான ஆதாரங்களையும், விளக்கங்களையும் கேட்கிறோமா? ஒருவேளை, அப்படி ஆதாரங்கள் காட்டப்படுமானால் அதன் உண்மைத்தன்மையைச் சோதித்தவர்களாக உள்ளோமா? பவுலடியார், தெசலோனிக்கேயருக்குச் சொல்லும் போது, எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள் (Iதெச.5:21) என்று கூறியுள்ளதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். யோவான் அப்போஸ்தலன் இக்கருத்தை மேலும் வலியுறுத்தும்படியாக, **பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்துறியுங்கள் (I யோவான் 4:1) என்று கூறியுள்ளார்.**

ஆகவே, இயேசு ஆண்டவர் போதித்த மெய்க் கிறிஸ்தவத்தை மீட்டெடுத்து இப்பூமியில் நிலைநிறுத்தி முன்னெடுத்துச் செல்ல வேண்டுமானால் யூதா நிருபத்தில் சொல்லியிருப்பது போல கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து (வ.22) தோமா போல ஆதாரம் கேட்டு காரியங்களை உறுதி செய்து கொள்ள வேண்டும். ஏனெனில், கிறிஸ்தவத்தில் கள்ள உபதேசங்கள் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதொன்றும் அறியாதிருந்தும் நியாயப்பிரமாணப் போதகராயிருக்க விரும்புகிறார்கள் (Iதீமோ:1:7) என்று பவுலடியார் தீமோத்தேயுவுக்கு எழுதியிருப்பது போலத் தான் நிலவரம் உள்ளது. இச்சூழ்நிலைக்கு நாம் இரையாகி விடாமல், தோமா போல பக்திக்காரியங்களில் காரண காரியங்களின் அடிப்படையில் செயல்பட்டு மறுமையைச் சுதந்தரித்துக் கொள்ள முழு முயற்சி எடுப்போம்.

III. **உண்மையென்று உறுதியானவுடன் அறிக்கை செய்யத் தயங்கவில்லை.**

**சந்தேகப்பேர்வழி என்னும் பழியைச் சுமந்து திரியும் தோமாவிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், உண்மை உறுதியானவுடன் அதற்கு உடன்பட வேண்டும் என்பது.**

எட்டு நாளைக்குப் பின்பு ஒட்டுமொத்த சீடர்கள் கூடியிருந்த கதவுகள் பூட்டப்பட்ட வீட்டில் தோமாவினிமித்தம் இயேசு காட்சி தந்து, நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல், விசுவாசியாயிரு என்றார் (யோவான்20:27). தோமா அவருக்குப் பிரதியுத்திரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான் (வசனம் 28). அதாவது, உண்மை உறுதியானதற்கு பிறகு அவன் மறு பேச்சிற்கு அங்கே இடங்கொடுக்கவில்லை. **என் ஆண்டவரே, என் தேவனே** என்று அவன் உரக்கக் கூறியது, இயேசு உயிரோடெழுந்தார் என்பதற்கான அங்கீகாரமாக மட்டுமல்லாமல், இயேசு ஆண்டவரின் ஒட்டுமொத்த தெய்வீகத்திற்கான சாட்சிக் குரலாகவும் அமைந்தது. மற்றப் பத்துப் பேரும் இயேசுவை **தேவனுடைய** குமாரனாகப் பார்த்த நிலையில் இவன் ஒருபடி மேலே சென்று யோவான் நற்செய்தியாளன் தன் நூலின் ஆரம்பத்தில் கூறியுள்ளது போல, கிறிஸ்துவை **தேவன்** என்று அறிக்கையிட்டான் ( யோவான் 1:1-2).

இயேசு ஊழியம் செய்த நாட்களில், அவருடைய கீர்த்தியைக் கண்டு, கேட்டு, உணர்ந்து அது எவ்விதத்திலும் மறுக்க முடியாததாக இருந்தபடியால் அநேக அதிகாரிகள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெப ஆலயத்திற்குப் புறம்பாக்கப்படாதபடி பரிசேயர்நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள். அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பியுள்ளார்கள் (யோவான் 12:42,43). இந்த அதிகாரிகள் இயேசுவின் மீது கொண்ட விசுவாசத்தால் எவ்வித பயனும் இல்லை. எப்படியெனில்! தேவனா? மனிதனா? என்ற நிலை வந்த போது இந்தப் படித்த அறிவிலிகள் **மனிதனுக்கு** முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள். மனிதனா இவர்களை கடைசி நாளில் நியாயந்தீர்க்கப் போகிறான்? (யோவான் 12:48) உலகக் கல்வியும், உலக மேன்மையும் ஒருவனை ஆவிக்குரிய ரீதியில் சரியாக நடத்துவதில்லை என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

தோமாவைப் போல் இந்த அதிகாரிகள் அறிக்கை பண்ணாததற்கு இன்னொரு காரணம், ஜெப ஆலயத்திற்கு புறம்பாக்கப்பட்டு விடுவோம் என்கின்ற பயம். மறுபடியும், இந்த படித்த அறிவிலிகளுக்கு ஜெப ஆலயத்தில் அங்கமாக இருப்பது முக்கியமா? அல்லது மோசேயும், தீர்க்கதரிசிகளும் எடுத்துச் சொல்லும் இயேசுவும், அவருடைய காரியங்களும் முக்கியமா?

என்று பகுத்துப் பார்க்க முடியவில்லை. என்ன பரிதாபம்? ஆகவே, அதிகாரிகள் இயேசுவின் மீது கொண்ட விசுவாசத்தை அறிக்கை செய்யவில்லை. ஆனால், இவர்கள் பெற்றிருந்த ஆன்மீக சூன்யத்தால் இயேசுவின் மீது கொண்ட விசுவாசம் அறிக்கை செய்யப்பட வேண்டியது அவசியம். **மனிதர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனை நானும்** பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன் என்று இயேசு கூறியுள்ளார் (மத் 10:32).

அருமையானவர்களே! இன்றைக்கு நம்மில் எத்தனைபேர் தோமாவைப் போல் இயேசுவின் காரியமாக, நமக்குத் தெரியாமல் இருப்பவைகளை தெரியாது என்று ஒத்துக் கொண்டு, நமக்கு போதிக்கப்படுகிறவைகளுக்கான ஆதாரங்களைத் தேடி, உண்மை உறுதியானதற்குப் பிறகு, எவ்விதத் தயக்கமும், பயமும் இல்லாமல் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்? சொல்லுங்கள்! இயேசு தரும் இரட்சிப்பு, இயேசு வாக்களித்துக் கட்டின ஒரே சபை, இயேசுவின் உபதேசப்படி தேவனுக்கான ஆராதனை, பரலோக பாக்கியத்துக்கான பக்தி வாழ்வு என்று இவைகள் பற்றியெல்லாம் புதிய ஏற்பாட்டிலிருந்து விளக்கமாகக் கேட்டுவிட்டு இன்னும் வேத வசனங்களின்படி அவைகளை உறுதியும் செய்துவிட்டு, தோமாவின் மனநிலைக்கு நம்மை உட்படுத்தாமல், அந்த அதிகாரிகளின் மனநிலைக்குத் தானே சென்று விடுகிறோம்! இது எப்படி நியாயமாகும்? எப்படி நாம் பரலோக பாக்கியத்திற்குச் சொந்தமாக முடியும்? சிந்திப்போம்.

ஆம், இயேசுவை யார் என்று அறிக்கை செய்வது மிகவும் முக்கியம். ஏனெனில், உலகமானது இயேசு ஆண்டவரை கிறிஸ்தவ மதத்தைத் தோற்றுவித்தவர் என்றும் இருக்கின்ற மகான்களில் இவரும் ஒருவர் என்றும், மனித நேய கருத்துக்களைச் சிறப்பாகப் போதித்தவர்களில் ஒருவர் என்றும் நினைக்கிறது. ஆம், தேவனுடைய பார்வையில், தேவனுடைய திட்டத்தில் அது அவசியமான ஒன்றாக இருக்கிறபடியால் தான், அறிக்கை செய்வதை இரட்சிப்பின் படிகளில் ஒன்றாக வைத்துள்ளார். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கைப் பண்ணப்படும் (ரோமர் 10:10) என்று. இரட்சிப்புக்கு விசுவாசம்(மாற்கு 16:16) மனந்திரும்புதல் (அப்.2:38) ஞானஸ்நானம் (அப்.22:16) எப்படி அவசியமோ அது போல் அறிக்கை செய்வதும் அவசியம்.

ஆகையால், அன்பானவர்களே, நம்மால் பழி சுமந்து திரியும் தோமாவிடமிருந்து நமக்குக் கிடைத்த பாடங்களை மனதில் வைத்து தேவனுக்குப் பிரியமாய் வாழ்வோமாக! ஆமென்!! ★

# போதிக்க அழைப்பு

Bro. J.C. சோட்

தாங்கள் போதிப்பதற்காக எவ்வாறு அழைக்கப்பட்டனர் என்பது குறித்து பலர் கதைகளைச் சொல்லி வருகின்றனர். ஒரு மனிதன் ஆகாயத்திலே **Go Preach Christ** என்று மூன்று ஆங்கிலச் எழுத்துக்களைப் பார்த்தானாம். அந்த மூன்று எழுத்துக்களும்[**கிறிஸ்துவைப் போதிக்கப் போ**] என்பதைக் கூறுவதாக அவன் முடிவு செய்தான். இந்த மனிதன் ஒரு விவசாயி. இவன் இவ்வாறு கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த மற்றொருவன் சொன்னான்: **அந்த மூன்று எழுத்துக்களும் "GO PLOW CORN' [போய் தானியத்தை விதை] என்பதாக இருக்கும்** என்று. கர்த்தர் இவ்வாறு தங்களிடம் பேசி, போதிக்கப் போகச் சொன்னார் என்பதாக இன்னும், பலர் வர்ணிக்கிறனர். சிலருக்குக் கனவில் தோன்றுகிறார், வேறு சிலருக்குக் காட்சியளிக்கிறார்! ஆனால் தமது வார்த்தையை போதிக்க மனிதர்களை தேவன் அழைக்கிறாரா? அப்படியானால், இந்த வழியில் தான் அவர்களை அழைக்கிறாரா?

புதிய ஏற்பாட்டில் மத்தேயு மாற்கு, லூக்கா, யோவான் சுவிசேஷங்களை நாம் படித்துப் பார்க்கிற போது, தம்மைப் பின்பற்ற 12 பேர்களை கர்த்தர் எப்படி அழைத்தார் என்பதை நாம் காண முடியும். இம்மனிதர்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் என அறியப்பட்டனர். அவரைப் பின்தொடர, அவரது ஊழியத்தின் தொடக்க காலத்தில் அவர்கள் அவரால் நேரிடையாக அழைக்கப்பட்டனர். அவருடைய அற்புதங்களைக் காணவும், அவருடைய உபதேசங்களைக் கேட்கவும், அவர் சென்ற பின் தொடர்ந்து ஊழியஞ் செய்ய பயிற்சி பெறவும் அவர்களை அழைத்தார். அவர்கள் சத்தியத்தை மட்டுமே கற்பித்தார்கள் என்பதில் நிச்சயமாக இருக்கும்படியாகவும், அவர் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்த அனைத்தையும் அவர்களுக்கு நினைவூட்டவும், சத்தியத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தவும், அந்நிய பாஷைகளில் பேசும் வல்லமையை அவர்களுக்கு அருளவும், அற்புதங்களைச் செய்யவும், தேவனுடைய விருப்பத்தை அறிவிக்க அவரால் உண்மையிலேயே அவர்கள் அனுப்பப்பட்டிருந்தனர் என்பதை மக்கள் ஏற்றுக் கொள்ளும்படியாகவும் தேற்றறவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக கிறிஸ்து வாக்களித்தார் [யோவான் 14:26; மாற்கு 16:20].

பின்னர் அப்போஸ்தலர்கள், தாங்கள் கை வைப்பதின் மூலம் பரிசுத்த ஆவியின் வல்லமையைக் கொடுப்பதற்கு. அந்த ஏழுபேரை தெரிந்தெடுக்க கேட்டுக்கொண்டனர். அப்போஸ்தலர்களுடைய பணிகளில் உதவியாக இருக்கவேண்டுமென்ற காரணத்தினாலேயே இவ்வாறு செய்தனர். நாட்கள் சென்ற பின்னர், இன்னும் சிலர் அப்போஸ்தலர்களால் தேர்ந்தெடுக்கபட்டு அவர்களுக்கும் இந்த வல்லமை அளிக்கப்பட்டது.

பரலோகத்தின் பிதாவிடம் திரும்பிச் செல்லுவதற்கு முன்பு இந்தப் பிரதான கட்டளையை அவர் அளித்தார்:.. **நீங்கள் உலகமெல்லாம் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்தானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்: விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று** (மாற்கு 16:15, 16) மீண்டுமாக, அவர் கூறும் போது, ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீடராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்தானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும் படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். **ஆமென்** (மத்.28:19, 20). அந்தக் கட்டளையை கவனியுங்கள்; போய் நற்செய்தியை அறிவியுங்கள்; யாருக்கு? உலக முழுவதுள்ள சகல மக்களுக்கும். யார் செல்ல வேண்டும்? அப்போஸ்தலர்களும், அவர்களால் மனந்திரும்பியவர்களும் செல்ல வேண்டும். நமது நாட்கள் வரை அது தொடருகிறது இல்லையா? ஏனெனில், நாம் கர்த்தருக்குள் மனந்திருப்பப் பட்டிருக்கிறோம். எனவே, நாம் போய் போதிக்க வேண்டும்.

ஆகாயத்திலே அடையாளங்களைக் கண்டு அல்லது காட்சிகளைப் பார்த்து அல்லது தேவனுடைய வசனத்தை போதிக்கச் செல் என்று சொல்லும் சத்தத்தைக் கேட்டு, தேவனுடைய மக்கள் யாரும் போதிக்கச் சென்றதாக புதிய ஏற்பாடு புத்தகத்தில் எங்கும் காண முடிவதில்லை என்பதை தயவு செய்து கவனியுங்கள். அல்லது இன்று கர்த்தர் யாரையும் அவ்விதமாக அழைப்பதைக் காண முடியாது. உலகம் முழுவதும் சென்று நற்செய்தியை போதியுங்கள் என அவருடைய மக்கள் அனைவருக்கும் ஏற்கனவே அவர் கட்டளையிட்டிருக்கிறார். தனிப்பட்ட முறையில் எவரையாகிலும் சந்தித்து, போய் வசனத்தைப் போதியுங்கள் என்று கேட்டுக் கொள்ளவோ அல்லது கட்டளையிடவோ அல்லது பலவந்தமாக அவர்களை அனுப்பிவைக்கவோ, அவருக்குத் தேவை என்ன?

நற்செய்தி வழியாக, அதாவது எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள வசனத்தில் வெளிப்படுத்தப்பட்ட நற்செய்தி வழியாக, அவரிடம் வந்து அவருக்குக் கீழ்ப்படியும்படியாகக் கர்த்தர் நம்மை அழைக்கிறார். அதே போல, எழுதப்பட்ட வசனத்திலிருந்து அறிவிக்கப்படும் நற்செய்தியை போதிப்பதின் மூலம், ஆத்துமாக்களை அவரிடம் வரும்படியாக அழைக்கிறார். கிறிஸ்து கூறினார்: வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்: அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார் (மத்.11:28,30). தெசலோனிக்கே கிறிஸ்தவர்களுக்கு பவுல் கூறினார். நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார், (II தெச2:14) எனவே, நற்செய்தியானது மண்டபங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது நற்செய்தியை எடுத்துச் செல்லும்படி கர்த்தருக்கு சொந்தமான மனித குலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. (IIகொரி4:7) தான் அவர்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையன்றி வேறொரு சுவிசேஷத்தை வானத்திலிருந்து வரும் ஒரு தூதன் பிரசங்கத்தாலும் தேவனுடைய சாபம் அவன் மேல் வரும் என பவுல் கூறினார் ( கலா 1:6–9) அப்படியிருந்தால், கர்த்தர் தமது நற்செய்தியை வார்த்தையினாலே வெளிப்படுத்தியிருக்கிறார். அதற்கு கீழ்ப்படிவோர் பிறருக்கு அதை எடுத்துச் செல்ல வேண்டும். கீழ்ப்படியும் போது, நற்செய்தியால் அவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என சொல்ல முடியும். இறுதியாக , கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது, பின்னர் அவர்களும் போய் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கவேண்டும்.

எல்லாரும் பிறருக்கு நற்செய்தியை எடுத்துச்சொல்ல வேண்டுமென்று சொல்லும் போது, அதன் பொருள், எல்லாரும் எல்லாருக்கும் பிரசங்கிக்க வேண்டுமென்பதல்ல என்பதைக் கவனிக்க வேண்டும். ஆணும், பெண்ணும் கலந்துள்ள ஒரு கூட்டத்தில் பெண்கள் பகிரங்கமாக பிரசங்கம் செய்யக்கூடாது. சபையைச் சார்ந்த பெண்கள் ஆண்பெண் இருபாலரிடமும் தனியாகவும், பெண்கள் குழுவிலும், குழந்தைகள் வகுப்புகளிலும் பேசலாம். ஆனால், ஆண் பெண் கலந்துள்ள கூட்டத்தில் அவர்கள் அமைதியாக இருக்க வேண்டும். (I கொரி 14:34; I தீமோ 2:11) இன்று பெண் போதகர்கள் இருக்கின்றனர். ஆனாலும், அவர்கள் சத்தியத்தையே போதித்தாலும் கூட, ஆண், பெண்கள் கலந்த கூட்டத்தில் அவர்கள் எழுந்து நின்று போதித்தால், தேவனுக்கு

அவர்கள் தனிப்பட்ட வகையில் கீழ்ப்படியாமல் போகின்றனர். ஆனால், எனக்குத் தெரிந்தவரை தங்களுடைய பகிரங்க போதனை மூலம் நூறு சதவீதப் பெண்கள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போவதோடு, தவறை போதித்து மனிதனுக்கும் தேவனுக்கும் தீங்கு விளைவிக்கின்றனர்.

ஆனால், ஆண்களைப் பற்றிய காரியம் என்ன? எல்லா ஆண்களுமே பகிரங்கமான பிரசங்கிகளாக இருக்க விரும்புவதில்லை: அல்லது அதற்குத் தேவையான திறமையோ, பயிற்சியோ இருப்பதில்லை. அவ்வாறு இருப்பின் கூட்டங்களில் அவர்கள் பேசக் கூடாது. ஆனால் நற்செய்திக்கு ஒருவன் கீழ்ப்படிந்திருக்கும் போது சபையில் அங்கத்தினர் ஆகிறான். உண்மையுள்ள ஒரு கிறிஸ்தவனாகிறான், நற்செய்தியை போதிக்க விருப்பமுடையவனாக இருக்கிறான். இதற்குத் தகுதியுடையவனாகவும் இருக்கிறான். கற்றுத் தேர்ந்து போதிக்க தன்னைத் தயார்படுத்திக் கொள்ளுகிறான். அப்படியிருக்கையில், கர்த்தர் அவருடைய வசனத்தை போதிக்க சகல விதத்திலும் அவனை ஏற்றுக்கொள்ளுகிறார்.

மீண்டுமாக, ஒரு திறமையும் இல்லாத, சத்தியத்தைக் கொஞ்சமும் அறியாத தங்களை தேவன் போதிப்பதற்காக அழைத்து, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் அவர்கள் வெளியிட வேண்டிய செய்திகளை தேவன் அவர்களுக்குத் தருவதாக பெருமையடித்துக் கொள்ளுபவர்கள் இன்னும் இருக்கின்றனர். நிச்சயமாக, அவர்கள் கூறுவது தவறு. மேலுமாக, அவர்கள் கற்பிக்கும் சகல காரியங்களுக்கும் பரிசுத்த ஆவியானவரின் பேரில் பழியைப் போட்டுவிடுவது மிகவும் வருத்தம் அளிக்கும் செயலாக உள்ளது. ஒரு வேளை, பரிசுத்த ஆவியானவர் போதிப்பதில் ஜனங்களை இன்று அற்புதவிதமாக வழிநடத்தினாலும். அவர் தவறை போதிக்க ஒரு போதும் வழிநடத்தமாட்டார். போதிக்கும்படியாய் அவர் ஒருவரையும், வழிநடத்துவதில்லை. ஆனால், தங்களை அழைத்திருப்பதாக உரிமை கொண்டாடும் பிரசங்கிமார்களை கவனித்துப்பாருங்கள்: பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்படுவதாகக் கூறிக் கொண்டு அவர்கள் போதிக்கக் கூடிய காரியங்களையும் கவனியுங்கள். வசனத்தில் காணப்படாத பலவற்றை அவர்கள் போதித்துக் கொண்டிருப்பதை நீங்கள் காண முடியும்: அவர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் முரண்படுகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, வேதாகமத்தில் நாம் படிக்காத, மனிதன் உண்டாக்கிய பெயர்களைத் தாங்கிய, இன்னும் இது போன்ற எத்தனையோ சபைகளில் அவர்கள் அங்கம் வகிக்கின்றனர். இந்த மக்கள் கர்த்தரை எப்படி பிரதிநிதித்துவப்படுத்த முடியும்? முடியவே முடியாது. அவர்கள் பிரசங்கிகளாக இருக்கலாம். ஆனால் தவறையும், சாபக் கேடானவைகளையும் அவர்கள் போதிக்கின்றனர். யோவான் கூறினார்: **பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதனால், நீங்கள் எல்லாஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால்உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்** (I யோவா 4:1) பல கள்ள தீர்க்கதரிசிகளும், போதகர்களும், பிரசங்கிமார்களும்

உலகத்தில் தோன்றியிருப்பதாக யோவான் கூறுகிறார். அன்று அது எவ்வாறு உண்மையாக இருந்ததோ அதே போல இன்றும் அது உண்மையே. இந்தப் பிரசங்கிகளை சோதித்துப் பார்க்க வேண்டுமென்று அவர் சொன்னார். வேறுவிதமாகக் கூறினால், அவர்களுடைய போதனைகளை தேவனுடைய வசனத்தோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவர்கள் கூறுவது வேத வசனங்களில் இல்லாவிட்டால் அல்லது கர்த்தர் சொல்லியிருப்பவைகளோடு ஒத்துப் போகவிட்டால், அவர்கள் எதைக் கூறிய போதிலும், அவர்கள் கள்ளப் போதகர்களே.

மீண்டும் யோவான் கூறினார்: கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல: கிறிஸ்துவின் உபதேசததில் நிலைத்திருக்கிறவனே பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான் [I யோவா 9:11].

ஆம், இன்று நமக்கு போதகர்கள் தேவை. நிறையபேர் தேவை. தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொள்ளுவதன் மூலமாக அழைக்கப்பட்டுள்ளவர்கள் தேவை. சத்தியத்தை மட்டும் போதிக்கக் கூடியவர்கள் தேவை. கர்த்தரையும் மனித ஆத்துமாக்களையும் நேசிக்கும் மனிதர்கள் நமக்குத் தேவை. அவர்கள் கிறிஸ்துவை அறிவிக்கும் பணிக்காகத் தங்கள் ஜீவனையும் அர்ப்பணிப்பவர்களாக இருக்க வேண்டும். போதிப்பதை ஒரு தொழிலாகக் கருதி கூலிக்கு மாரடிப்பவர்கள், அல்லது சம்பளம் கொடுத்தால் தவறையும் தயங்காமல் போதிக்கத் தயராக இருப்பவர்கள நமக்குத் தேவையில்லை. வாலிப்பிரசங்கி தீமோத்தேயுக்கு பவுல் கூறினார்: நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப் போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக, அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்து கட்டளையிடுகிறதாவது. சமயம் வாய்த்தாலும் வாய்க்கவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு, புத்தி சொல்லு. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்கு திரளாகச் சேர்த்துக் கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும்.

நீயோ எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச்செய், உன் ஊழியத்தை நிறைவேற்று'. [II தீமோத்தேயு 4:1–5] பவுல் இங்கு கூறியிருப்பவற்றை நாம் தீவிரமாக சிந்திப்போம். போதகனே, நீ எதைப் போதிக்கிறாய் என்பதில் கவனமாக இரு. மக்களே, நீங்கள் எதைக் கேட்கிறீர்கள் என்பதில் கவனமாய் இருக்க உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன். ★

பெண்கள் பகுதி

# குடும்பங்களின் இன்றைய அத்தியாவசியத் தேவைகள்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

முதலாம் நூற்றாண்டில் நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்தமான விருந்தாளியாக பல வீடுகளுக்கு சென்றுள்ளார். அவர் சென்ற எல்லா வீடுகளுமே தேவையில் இருந்தது. தேவகுமாரன் அந்தத் தேவைகளை சந்தித்தார். அதே இயேசு கிறிஸ்து இன்றைக்கு நம்முடைய சுகவீனம், பிரச்சனைகள், தீர்வுகள் போன்றவற்றிற்கும் உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்.

உண்மை என்னவெனில், எல்லாக் குடும்பங்களுமே பற்பலத் தேவைகளில் இருக்கிறது. ஆனால், குடும்பங்களுக்கு குடும்பம் தேவைகள் வித்தியாசப்பட்டிருக்கிறது. எப்படியெனில், சில குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை மையமாக வைத்து அவரைச் சுற்றி தங்கள் காரியங்களை மேற்கொள்ளுகிறவர்கள். மற்றவர்கள் தங்கள் குடும்பத்தில் இயேசுவை வெளியே ஒதுக்கி வைத்து விட்டு தங்கள் விருப்பம் போல் வாழ்க்கையை நடத்துகிறவர்கள்.

என்னுடைய திட்டமான வலியுறுத்தல் யாதெனில், இன்றைக்கு நாம் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சனைகளுக்கு விடுதலை இயேசுவின் மூலம் மட்டுமே கிடைக்கும். அழகான அந்த ஏதேன் தோட்டத்தில் பிதாவாகிய தேவன் திருமணம் (குடும்பம்) என்பதை ஸ்தாபித்து வைத்தார். அக்குடும்பத்துக்குத் தேவையான மகிழ்ச்சியை தேவன் தெரிந்து வைத்திருந்தார்.

இப்போது நம் தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள இன்றைய குடும்பங்களின் அத்தியாவசியத் தேவைகள் என்னவென்பதைப் பற்றிக் காண்போம்.

**'அன்பு, துணை' – இன்றைய தேவை**

கணவன், மனைவி ஆகிய இருவருக்குள்ளும் அதிக அன்பும், உறுதுணையும் தேவையாயிருக்கிறதல்லவா? இன்றைக்கு அதிக அளவு குடும்பங்கள் சீரழிவதற்குக் காரணம் இந்த அன்பும் உறுதுணையும் இல்லாததே காரணம். இயேசுவையும், அவர் சொன்ன உபதேசங்களையும் ஓர் அர்ப்பணிப்பு உணர்வுடன் சார்ந்திருந்தால் தான் இரண்டையும்

பெற்றுக்கொள்ள முடியும். பரலோக மைந்தனை உங்ளுடைய குடும்பத்தில் ஒரு மாலுமியாக ஏற்றுக்கொள்ளா விட்டால் நாம் ஒரு போதும் பரலோகம் செல்லவே முடியாது. இப்பூலோகத்தின் சொர்க்கமாக திகழ்ந்த ஏதேன் தோட்டத்தில் சிருஷ்டிக் கர்த்தாவாகிய நம்முடைய தகப்பன், மனிதன் தனிமையாய் இருப்பதை கவனித்து அது நல்லதல்ல என்கிறார். துணை வேண்டும் என்று நினைத்தார். மோசேயானவன் எழுதும் போது **மனிதன் தனிமையா யிருப்பது நல்லதல்ல ஏற்ற துணையை உண்டாக்குவேன் என்றார் என்கிறான்** (ஆதி.2:18).

ஆசையாய் உருவாக்கப்பட்ட அந்தத் துணை, ஆதாமின் வெற்றிடத்தை நிரப்பும்படியாக உருவாக்கப்பட்டாள். பெண் உருவாக்கப்பட்ட அந்த அழகான, அற்புதமான விதத்தை வர்ணிக்கும் வகையில் மோசே அதை இவ்வாறு விவரிக்கிறான் அயர்ந்த நித்திரையை, வருவித்து விலாவிலிருந்து எலும்பை எடுத்து, அதிலிருந்து பெண்ணை உருவாக்கி அவளை ஆதாமிடம் கொடுத்தார் என்று. உடனே ஆதாம் இவள் என் எலும்பில் எலும்பும், என் மாமிசத்தில் மாமிசமும் என்கிறார்

ஆனால், பிதா எதிர்பார்த்த விதமாக இல்லாமல் இந்த அன்பும், துணையும் மாறி, வெறுப்பு, பிரிவினை என்பது பாவத்தினால் வந்து சேர்ந்தது. உபா. 24:14 வசனப்பகுதிகளில் கணவன், மனைவி பிரிந்தால் என்ன செய்ய வேண்டும் என்று கட்டளை கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. ஆதியாகாமம் தொடங்கி மல்கியா வரை லட்சக்கணக்கான இஸ்ரவேல் ஜனங்களின் சரித்திரத்தைப் பார்க்கும் போது கணவன். மனைவி அன்பு கெட்டு, பிரிவினை, துரோகம் ஏற்பட்டுவிட்டது. தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு கடுமையாக எச்சரித்துக் கொண்டே வந்தார். மல்.2:14–16 வாசிக்கும் போது இளவயதின் மனைவிக்கு துரோகம் பண்ணாதிருங்கள் என்று எச்சரிக்கிறார். புதிய ஏற்பாட்டில் கணவன் தன் வீட்டை விட்டு பிரிந்து தன் மனைவியோடு இசைந்திருக்க வேண்டும் என்று இயேசு சொல்கிறார். (மத். 19:4–6). புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்தார் (எபே.5:25) புருஷர்களும், மனைவிகளை தங்கள் சொந்த சரீரங்களாக பாவித்து அன்பு கூற வேண்டும் (எபே. 5:28). புருஷர்களே உங்கள் மனைவிக்கு செய்ய வேண்டிய கனத்தை செய்யுங்கள் என்று 1 பேதுரு 3:7– ல் கூறுகிறார். வாழ்க்கை என்னுடையதல்ல, நம்முடையது என்ற

தத்துவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்து, கணவன், மனைவி என்ற மூன்று கோடுகளும், ஒரு முக்கோணம் என்றால், மேல்கோணம் கிறிஸ்துவாகவும், கீழ் இரண்டு கோணங்களும் கணவனும் மனைவியுமாக இருந்தால் அது தான் விசேஷமானது.

### புனிதம், மெய்ப்பற்று – இன்றைய தேவை

ஒழுக்கம் கெட்டு, ஒழுக்கத்தை செயல்படுத்துவது இயலாது என்ற நிலையில் இன்றைய நாட்கள் உள்ளது. ஒரு பெண்ணோ, ஆணோ தங்கள் வாலிபத்தை அடைவதற்கு முன்பு கீழ்கண்ட வசனங்களை தங்கள் சிந்தையில் கொள்ள வேண்டும். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கிவான்கள். அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்.(மத். 5:27, 28) இயேசு கிறிஸ்து விபச்சாரத்தையும், வேசித்தனத்தையும் ஆரம்பத்திலேயே அடியோடு அறுக்கச் சொல்லுகிறார். (மாற்கு.7:2023)ல் மனுஷனைத் தீட்டுப்படுத்துவது வேசித்தனம் விபச்சாரம் என்கிறார். Iகொரி.6:18–20)–ல் வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள் என்கிறார். கலாத்தியர். 5:19–21–ல் விபச்சாரம், வேசித்தனம் மாம்சத்தின் கிரியைகள் என்கிறார். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் என்று Iதெச. 5:22–ல் கூறுகிறார். நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகி மோக இச்சைக்குட்படாமல், தன் சரீர பாண்டத்தை பரிசுத்தமாயும், கனமாயும் ஆண்டு கொள்ளும் படி அறிந்து இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்க வேண்டும். கர்த்தர் நீதியைசரிகட்டுகிறவராயிருக்கிறார் (1தெச 4:3–7) என்கிறார்.

### பெற்றோர்கள் பிள்ளைகள் இவர்களுக்கிடையே அன்பு, துணை எவ்வாறு இருக்கிறது!

பெற்றோர்கள் கிறிஸ்தவ அன்பை பிள்ளைகளுக்கு காட்ட வேண்டும். பிள்ளைகளுக்காக பிள்ளைகளுடன் இருந்து வாழ வேண்டும். பிள்ளைகள் குடும்பத்தை ஆளுகை செய்யாமல், பெற்றோர்கள் பிள்ளைகளை ஆளுகை செய்யவேண்டும். இது வேதாகமத்தின் கட்டளை. பிள்ளைகளின் தேவைகளை அன்போடு பூர்த்தி செய்ய வேண்டும். நீ பிள்ளையாயிருந்தால் இப்போது பெரியவனாகி தனிக் குடும்பமாய் இருந்தால். நீ எத்தனை முறை உன் பெற்றோரைப் போய் பார்த்திருக்கிறாய்? எத்தனை முறை பேசியிருக்கிறாய்? அருகாமையில் இருந்தால், கடைசியாக நீ போய் உன் பெற்றோரை பார்த்துப் பேசி, அவர்கள் தேவைகளை சந்தித்து எவ்வளவு நாள்

ஆயிற்று? இதோ, இன்று நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியே போகிறேன் என்று யோசுவா 23:14 ல் கூறியபடி உங்கள் பெற்றோர்கள் போகிறதற்குள்ளாக போய் கவனிக்காதபடி உங்கள் அலுவல்கள், நண்பர்கள் காரணமாயிருக்கிறார்களா? நிறையப் பிள்ளைகள் தங்கள் பெற்றோர் கண்ணை மூடிய பிறகு அவர்கள் அன்பு, துணை பற்றி பெரிதாக பேசுவார்கள். பரிசுத்த ஆவியானவர் இதைப்பற்றி வேதாகமத்தில் எழுதிக் கொடுக்கவில்லையா [எபே.6:1–2]. தாமதமின்றி அவரின் போதனைப்படி நடப்போம். இயேசு கிறிஸ்து நம் அன்பும், துணையும் பலப்படவுமே இவ்வுலகிற்கு வந்தார்.

பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது பாலிய பெண்களை எல்லாக் கற்புடன் கூடிய சகோதரிகளைப் போல, பாவித்து, புத்தி சொல்லு [2 தீமோ5:2] என்கிறார். 1. தீமோ. 5:22 ன் சட்டமே **உன்னை சுத்தவானாக காத்துக் கொள்** என்பது தான். பால் சம்பந்தப்பட்ட உறவு என்பது, திருமணம் சம்பந்தப்பட்ட ஒன்றாகத் தான் இருக்க வேண்டும். இந்த உறவு வேறு எந்த வகையில் கிடைத்தாலும் அது பா–வ–ம் என்ற மூன்றெழுத்துக்குள் அடங்கியே தீரும். குடும்பத்தின் பிரச்சனை என்னவெனில், இந்த பாவத்தை கணவன் , மனைவி இதில் யாராவது ஒருவர் செய்வதின் காரணம் தான் . இயேசு இதைப் பற்றிக் கூறும் போது வேசித்தன முகாந்திரத்தினாலொழிய தன் மனைவியை தள்ளி விடக் கூடாது என்கிறார். [மத். 5:32]. மத்.19:9– ம் இதே காரியத்தை இயேசு கிறிஸ்து வலியுறுத்துகிறார். [நீதி. 9:17]–ஐ நாம் வாசிக்கையில் சாத்தான் கூறுகிற அறிவுரைகளை கேட்கக் கூடாது என்று ஞானி புத்தி சொல்லுகிறான். திருமணத்தின் மெய்ப்பற்று புனிதத் தன்மை இவற்றிற்கு கிறிஸ்து அதிகாரியாக இருக்கிறார். எனவே கிறிஸ்துவின் உபதேத்தை பின்பற்றுவோம்.

**மன்னித்தல், தயவு , இரக்கம், கரிசனை இன்றைய தேவை;**

குடும்பமாயிருந்தாலும் சபையாயிருந்தாலும் மன்னித்தல் என்பது மிக அவசியம். மனுஷனுடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மன்னியாதிருந்தால் உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார் [மத். 6:14,15]. ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்த உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

(கொலோ. 3:13). கொலோசே பட்டணத்து மக்கள், குடும்ப சூழல், குடும்ப உறவு நிலைகளின் மத்தியில் வாழ்ந்தவர்கள். பவுல் மனைவிகளுக்கும், கணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் கூறுவதைப் பாருங்கள். மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். புருஷர்களே, உங்கள் மனைவிகளின் அன்பு கூறுங்கள். அவர்கள் மேல் கசந்து கொள்ளாதிருங்கள். பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலும் கீழ்ப்படியுங்கள். இது கர்த்தருக்கு பிரியமானது. பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்று போகாதபடி அவர்களுக்கு கோபமூட்டாதிருங்கள் (கொலோ. 3:18-21).

மன்னிப்பு என்பது ஒன்று, இரண்டு, மூன்று முறை அல்ல, பேதுரு ஏழு முறை போதும் என்று நினைத்த போது இயேசு கிறிஸ்து ஏழெழுபது முறை ( மத் .18:22) என்கிறார். இயேசு கிறிஸ்து மத் . 17:4 -ல் ஒரு நாளில் ஏழு தரம் உனக்கு விரோதாய் குற்றஞ்செய்து ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து, நான் மனஸ்தாபப் படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக என்றார். இயேசுவைப் பின்பற்றும் போது நம் இருதயம் இளகி மென்மைத் தன்மையை அடைகிறது. இது இன்றைய தேவை தான். அன்பான வார்த்தை தயவை ஏற்படுத்துகிறது. இதைப்பற்றி வேதம் கூறும் போது, ஒருவருக்கொருவர் தயவாயும் (எபே. 4:32) இருங்கள் என்கிறது. தங்க சட்டம் என்று போற்றப்படுகிற மத் 7:12 -லும் இதையே நாம் வாசிக்கிறோம். மற்றவர்கள் நம்மீது தயவு, அன்பு, மன்னிப்பு இவைகளை காட்ட வேண்டும் என்று எதிர் பார்க்கும் போது நாம் இவைகளை முந்தி அவர்களுக்கு காட்ட வேண்டும்.

இரக்கமும், கரிசனையும் இன்றைய குடும்பங்களின் தேவையாயிருக்கிறது. இது ஏதோ கடையில் வாங்கும் பொருள்கள் அல்ல. குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் இதை நடைமுறைப்படுத்த வேண்டும். அப்போது தான் பரலோகத்தின் தேவனும், இயேசு கிறிஸ்துவும் நம்முடைய குடும்பத்திற்கு ஆசீர்வாதத்தையு, இரக்கத்தையும் கட்டளையிடுவார். ஆமென். ★

## சரி, தவறு

1. ஒருவர் தவறாகப் போதிக்கப்பட்டு, சரியாக ஞானஸ்தானம் பெற முடியாது (ரோமர் 10:17)
2. ஒருவர் தவறாக ஞானஸ்நானம் பெற்றுவிட்டு சரியாக ஆராதிக்க முடியாது (அப்போஸ் 2:48)



வாலிபர் பகுதி

# பயணிகளின் கனிவான கவனத்திற்கு

சகோ. பென்னி மார்ட்டீன்

**கி**றிஸ்துவுக்கள் பிரியமான வாலிபர்களாகிய உங்களுக்கு வானவராம் இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கட்டுரையின் வாயிலாக உங்கள் யாவரையும் மறுபடியும் சந்திப்பதில் மனமகிழ்ச்சி அடைகிறேன்.

மேற்சொல்லப்பட்ட வார்த்தைகளை நம் ஒவ்வொரு வரும் ஒருமுறையாவது தவறாது இரயில் நிலையத்திலோ, பேருந்து நிலையத்திலோ கேட்டிருப்போம். இவ்வார்த்தைகளை நாம் கேட்கும் போது நம் உடைமைகளை எடுத்துக்கொண்டு பயணத்திற்கு தயாராகிவிடுவோம். பிரியமானவர்களே! நம் வாழ்க்கையே ஒரு பயணம்தான், நாம் உயிரை பணயம் வைத்து ஒவ்வொருவரும் இவ்வுலகில் பரலோகத்தை நோக்கியோ அல்லது நரகத்தை நோக்கியோ நாட்களை நகர்த்திக்கொண்டு தான் இருக்கிறோம். தேவனுடைய பிள்ளைகயாகிய நம்முடைய பயணம் நிச்சயமாகவே பரலோகத்தை நோக்கிய ஒன்றாகத்தான் இருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. எப்படிப் பழைய ஏற்பாட்டின் மக்கள் அவர்களுக்கு சுதந்திரமாக வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானானை நோக்கி பயணித்தார்களோ அதைப்போல் நமக்கு சுதந்திரமாக வாக்குத்தத்தம் செய்யபட்டிருக்கிற பரமக்கானானை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறோம். சிலர் பயணத்தை இப்போதுதான் தொடங்கியிருப்பார்கள், சிலர் தொடர்ந்து கொண்டு இருப்பார்கள், சிலர் முடிக்கும் தருவாயில் இருப்பார்கள். நம் வாழ்க்கைப் பயணத்தில் எவ்வளவு கவனமாக இருந்தாலும் சரி பள்ளங்கள் மேடுகள் தவிர்க்க முடியாததாகவும், தடுக்க முடியததாகவும் காணப்படுக்கின்றன. இவ்வுலகில் பயணங்கள் பலவிதம். சிலர் பேருந்துகளில் பயணிப்பார்கள், சிலர் ரயில்களில் பயணிப்பார்கள், சிலர் மகிழுந்துகளில் பயணிப்பார்கள். பயணமுறைகளில் வித்தியாசங்கள் இருந்தாலும் சேருமிடம் ஒன்றுதான். பரலோகத்தை நோக்கிய நம் பயணத்திலும் சில பள்ளங்கள், சில மேடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

சில வேளைகளில் பயணம் சுகமானதாக இருக்கும், சில வேளைகளில் சுமையானதாக இருக்கும். எது எப்படியோ நம் சேருமிடம் பரலோகமாக இருப்பதால் நாம் கூட்டமாகப் பயணித்தாலும் தனிமையாக பயணித்தாலும் இனிமையான அனுபவமாகத்தான் அது இருக்கும். இப்பாழாய்ப் போன பாரிலிருந்து விடுபட்டு மகிமையும், மாட்சிமையும் நிறைந்த பரலோகில் நிவாசம் செய்யவே ஒவ்வொரு நொடியும் துடிக்கிறோம். ஆனால் நம் பரலோகப் பயணத்தில் சில தடைகற்கள், முட்டுக்கட்டைகள் இருக்கின்றன. அவைகள் எவைகள் என கண்டறிந்து அவைகளை களைந்தெறிந்து பரலோகப்பயணத்தை

நிறைவேற்றுவோம். இப்போது நாம் அத்தடைக் கற்கள் எவைகள் என பார்ப்போம்.

**உலகத்தன்மை**

ஆரம்பத்திலிருந்து கிறிஸ்தவர்களுக்கு பாவம் நிறைந்த இவ்வுலகில் பாவத்தால் கறைபடாதபடி வாழ்வதில் போராட்டம் இருந்திருக்கிறது. நாம் கிறிஸ்தவர்களாவதற்கு முன்பு இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாக வாழ்ந்து வந்தோம். ஆனால், சில கிறிஸ்தவர்கள் இன்றும் அதே உலக வழக்கத்தின்படி வாழ்வதை பழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். நாம் கிறிஸ்துவுக்குள் வந்த பிறகு விளையாட்டு களமல்ல, அது ஒரு போர்க்களம் என்பதை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். நம் கிறிஸ்தவ வாழ்க்கை ரோஜா மலர்களானதல்ல, ரோஜா மலரைப் பற்றிய ஒவ்வொருவருடைய பார்வையில் வேறுபாடு உண்டு. சிலர் அழகான ரோஜா மலரில் தேவன் ஏன் முட்களை வைத்தார் என்று எண்ணுவார்கள். இது இவர்களுடைய பார்வை. சிலர் முட்களுக்கு நடுவில் தேவன் இதழ்களை வைத்தாரே என்று எண்ணுவார்கள். இது இவர்களுடைய பார்வை. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் இவ்வுலகத்தில் வாழ்ந்தாலும் உலகத்தாரல்ல [யோவான் 17;14]. தாமரைச்செடி குளத்தில் வளர்ந்தாலும் அதன் இலை நீரோடு ஒட்டாமல் இருக்கிறதோ அதேபோல் கிறிஸ்தவர்களாகிய நாம் இவ்வுலகத்தில் வாழ்ந்தாலும் உலகத்தன்மை நம்மை ஒட்டாதபடி வாழவேண்டும்.

அன்பார்ந்தவர்களே! இப்பூமி நமக்கு சொந்தமல்ல நாம் இப்பூமியில் அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிறோம் என்பதை நாம் நன்றாக உள் வாங்கிக்கொண்டால், உணர்ந்துகொண்டால் உலகத்தன்மை நம்மைவிட்டு நீங்கிவிடும் [I பேதுரு 2:11] நம் சொந்த நாடு பாடுகளற்ற, கண்ணீரற்ற, துக்கமற்ற, வருத்தமற்ற பரலோகமென அறியும் போது நம்மை அறியாமலேயே பரவசம் ஏற்படுகிறது. இப்பூமிக்குரிய வாழ்வு குறுகியகால அளவை உடையது. நம் ஜீவன் கொஞ்சகாலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப்போலிருக்கிறதே [யாக்கோபு 4;14]. காரியம் இப்படியிருக்கும்போது நித்திய நித்தியமான பரலோக வாழ்வை விட்டுவிட்டு நாம் ஏன் அற்பகால பூமிக்குரிய வாழ்வுக்காக கவலைப்பட வேண்டும். நாம் இவ்வுலகத்திலே வாழ்ந்தாலும் உலக சிநேகமற்றவர்களாக உலகத்தோடு ஒட்டாத வாழ்க்கை வாழவேண்டுமென்று தேவனால் எதிர்பார்க்கப்படுகிறோம்.

**அவிசுவாசம்**

பரலோகத்தை நோக்கிய நம் பயணத்தில் இரண்டாவது தடைக்கல்லாக இருப்பது அவிசுவாசம். தேவன் எப்போதுமே தம்முடைய பிள்ளைகள் தம்மை முழுமையாக விசுவாசிக்க வேண்டுமென்று விரும்புகிறார். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத்

தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும் [எபிரெயர் 11;6]. விசுவாசம் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் "ஆக்ஸிஜன்" என்றழைக்கப்படுகிறது. ஆனால் தேவனுடைய பிள்ளைகளாகிய நம்முடைய வாழ்க்கையில் அவிசுவாசம் அழையா விருந்தாளியாக வலம் வந்து வாட்டி வதைக்கிறது. இஸ்ரேல் ஜனங்கள் அந்த கானான் தேசத்தை நோக்கிய வனாந்திர யாத்திரையில் நாற்பது நாட்களில் நடக்கவேண்டிய தூரத்தை நாற்பது வருடங்கள் நடந்ததற்கான காரணங்களில் ஒன்று அவர்களுடைய அவிசுவாசந்தான். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாசரேத் என்னும் ஊரில் வளர்ந்தார் என்பதை நாமெல்லோரும் அறிந்திருக்கிறோம். அந்த நாசரேத் ஊருக்கு இயேசு கிறிஸ்து சிலநாட்களுக்கு பிறகு வந்து ஒரு ஓய்வு நாளிலே ஜெப ஆலயத்திலே உபதேசம் பண்ணினார், அந்த ஜனங்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து இயேசுவானவர் ஆச்சரியப்பட்டு அங்கே அவர் சில நோயாளிகள் மேல் கைகளை வைத்து, அவர்களை குணமாக்கினதேயன்றி வேறொரு அற்புதமும் செய்யவில்லை [மாற்கு 6:1–6]. மத்தேயு பத்தாம் அதிகாரத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்கு அற்புத அடையாளங்களை செய்யும் வல்லமையைப் கொடுக்கிறார். ஆனால் 15, 16 வசனங்களில் நாம் பார்க்கும் போது ஒரு மனிதனுடைய மகன் சந்திரரோகியாய் இருந்தான், அவனை சுகப்படுத்த அப்போஸ்தலர்களால் கூடாமல் போயிற்று. இயேசு கிறிஸ்து அந்த வியாதியை சுகப்படுத்தினார். "அப்பொழுது சீடர்கள் இயேசுவினிடத்தில் தனித்து வந்து: அதை துரத்திவிட எங்களால் ஏன் கூடாமல்போயிற்று என்று கேட்டார்கள். அதற்கு இயேசு உங்கள் அவிசுவாசத்தினாலேதான்" என்று சொன்னார். பிரியமானவர்களே! அவிசுவாசம் கிறிஸ்தவ வாழ்க்கையில் எத்தகைய மோசமான விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். "நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்" [IIகொரிந்தியர் 5:6].

பிரியமான வாலிபர்களே! பரலோகத்தை நோக்கிய நம் பயணத்தில் இன்னும் பல தடைக்கற்கள் உண்டு. ஆனாலும், காலத்தின் அருமை கருதியும், காகிதத்தின் அருமை கருதியும் இறுதி கருத்துக்குள்ளாக வர ஆசைப்படுகிறேன். இப்பூமியில் எதுவும் நிரந்தரமில்லை இங்கே நமக்கு சுதந்திரமுமில்லை. கவலையற்ற, துன்பமற்ற, கண்ணீரற்ற வாழ்க்கையை பரலோகத்தில் நம் பரமபிதா வைத்திருக்கிறார். இன்னும் பரலோகத்தைப் பற்றி பரவசமூட்டும் காரியங்களை தேவன் வேதாகமத்தின் பக்கங்களில் பதிவு செய்திருக்கிறார். அவற்றின் மீது நாம் நம்இதயத்தை பதிக்கும் போது, பரலோகப் பயணம் இனிதாக அமையும். இம்மண்ணுலகில் நாம் அந்நியர்களாக இருந்தாலும், விண்ணுலகோடு நாம் அந்நியோந்நியமாய் இருந்தால் பயணத்தின் இடைவெளி குறையும். இப்பயணம் இன்னும் இனிமையாக இருக்கவேண்டுமென்றால் மனதை இறுக்கமாக வைக்காமல் தேவனோடு நெருக்கமாக இருந்து 'பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைக் துவக்குகிறவரும் முடிக்கிற வருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் [எபிரெயர் 12:1]. ★

சிறுவர் பகுதி

# கல்லறையிலிருந்து இயேசு எழுந்தார்

Bro. ஏபில் நாயகம்

**எ**னதருமை தம்பி, தங்கைகளே! உங்களை இப்பகுதியின் மூலம் சந்திப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இயேசு ஆண்டவர் இப்பூமியில் வாழ்ந்த போது மிகவும் நேசித்தார். இம்மாதம் அவரைப் பற்றி சில காரியங்களை கற்றுக் கொள்ளுவோம், வாருங்கள். உங்களிடம் ஒருவர் வந்து, தன் நண்பன் மரித்து, மூன்று நாட்களுக்கு பிறகு உயிரோடு எழுந்தான் என்று சொன்னால் என்ன செய்வீர்கள். எதையோ உளருகிறான் என்று கூறிவிட்டு விடுவீர்கள். இதேபோல் உங்களிடம் வந்து இயேசு கிறிஸ்து மரித்தார். ஆனால், மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்? அதை நீங்கள் நம்ப வேண்டும். ஏனென்றால், வேதம் கூறும் எல்லா சம்பவங்களுக்கும் ஆதாரங்கள் உள்ளன. அதேபோல, உயிர்த்தெழுந்த சம்பவங்களுக்கும் ஆதாரங்கள் உள்ளன. சரி, அவை என்ன என்று பார்ப்போமா?

### I. ஏனென்றால் வேதம் அப்படித்தான் கூறுகிறது

நாம் உயிர்த்தெழுதலை விசுவாசிக்க ஒரு சிறந்த காரணம் இதுதான். ஏனென்றால், வேதம் இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என கூறுகிறது. உங்களுக்கு ஒன்று தெரியுமா? எழுதப்பட்ட புத்தகங்களிலேயே மிகவும் சரியாக, பிழையின்றி, துல்லியமாக எழுதப்பட்டது வேதாகமம் தான்! அநேகம் பேர் வேதம் தவறு என்று நிரூபிக்க முயன்றும் முடியாமல் அவர்களின் முயற்சி படு தோல்வியில் முடிந்துவிட்டது. வேதம் கூறும் மற்ற காரியங்கள் உண்மைதான் என்றால் இதுவும் உண்மையாகத்தானே இருக்க முடியும்.

### II. தீர்க்கதரிசிகளினால் உயிர்த்தெழுதல் காரியம் முன்னுரைக்கப்பட்டது

இயேசு பிறப்பதற்கு சுமார் 1000 ஆண்டு முன்பு வாழ்ந்த தாவீது ராஜா கூறும்பொழுது, கிறிஸ்து மரித்து உயிரோடு எழுவார் என்று கூறியிருக்கிறார். சங். 16:10 ல் **"என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்"** என கூறியிருக்கிறார். இதை அப்போஸ்தலனாகிய பேதுரு அப்போஸ்தலர் 2:28 ல் மேற்கோள் காட்டியிருக்கிறார். எனவே இதுவும் ஒரு ஆதாரமாய் இருக்கிறது.

### III. பயம் மாறி விசுவாசம்

சீஷர்களுக்கு ஒரு சோகமான நேரமாக இருந்திருக்கும். பயத்தினதல் அனைவரும் ஓடி விட்டார்கள். தைரியமான பேதுருவும் இயேசுவை மூன்று முறை மறுதலித்தான். ஆனால், அடுத்த சில வாரங்களில் இயேசு உயிரோ எழுந்தார் என அப்போஸ்தலர்கள் பிரசங்கித்தார்கள். துன்புறுத்துதலோ சிறையோ, பயமுத்தலோ அவர்களை அப்பணியிலிருந்து தடுக்கவில்லை. எந்த சூழ்நிலையிலும் பிரசங்கித்தார்கள் (அப்4:1820).

★

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு,

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை அக்டோபர் மாத இதழில்)**

## யோசுவா புத்தகத்தில் தேடி கண்டுபிடியுங்கள் ( 23 : 1 -24 : 28 )

1. யோசுவா இஸ்ரவேலின் மூப்பருக்கு என்ன ஆலோசனை வழங்கினார்?
2. யோசுவா இஸ்ரவேலின் மூப்பருக்கு என்ன எச்சரிக்கை விடுத்தார்?
3. தேவன், ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு ஆகியோரின் சந்ததியருக்கு என்ன செய்தார்?
4. பாலாக் இஸ்ரவேலுக்கு விரோதமாக என்ன பாவம் செய்தான்?
5. யோசுவா எதைத் தெரிந்துகொள்ளும்படி ஜனங்களை அறிவுறுத்தினார் ?
6. ஜனங்கள் யோசுவாவிடம் யாரை சேவிக்கப் போவதாகச் சொன்னார்கள்?
7. சீகேமிலே என்ன உடன்படிக்கை பண்ணப்பட்டது?
8. கர்வாலி மரத்தின் கீழ் பெரிய கல்லை வைத்ததின் நோக்கம் என்ன?
9. யோசுவா மரித்தபோது அவருடைய வயது என்ன ?
10. யோசேப்பின் எலும்புகளை என்ன செய்தார்கள்?

## ஆகஸ்ட் மாத வினாக்களுக்கான விடைகள்

1. சாபத்தீடானதற்கு
2. வெள்ளி, பொன், வெண்கலம் மற்றும் இரும்பு
3. ஆகான்
4. ஈட்டி
5. கெரிசீம், ஏபால்
6. கிபியோனின் குடிகள்
7. போஜன பதார்த்தம்
8. ஏவியர்கள்
9. கிபியோன், ஆயலோன்
10. பெரிய கற்கள்

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

1.புளோரா சம்மா - திருப்பத்தூர்
2.சாவித்திரி - திருப்பத்தூர்
3.பிரபா - கேத்தனூர்
4.ஜெமிலா செல்லய்யா - நெல்லை
5.சரஸ்வதி தேவராஜ் - சென்னை
6.ஜாய் கமலம் - தூத்துக்குடி
7.ஜெய்சிங் - சென்னை
8.மாலதி ஜெயசீலன் - சீர்காளி
9.தார்மராஜ் - கன்னியாகுமரி
10.ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்
11.ஜெபத்தாய் - தூத்துக்குடி
12.சாலமோன் - காங்கயம்
13.செல்வமணி குணசேகரன் - சென்னை
14.சாலமோன் - காங்கயம்
15.செல்வசிங் - சென்னை
16.சத்தியசீலன் - கோவில்பட்டி
17.பாரதி - பவானி
18.அபிஷேக் - திருச்சி
19.பால்ராஜ் - மதுரை
20.சாந்தாகுமாரி - தூத்துக்குடி

# விழாதபடிக்கு எச்சரிப்பு!

Bro. பாண்டியன்

**அ**ன்பான தேவ பிள்ளைகளே! நாம் கிறிஸ்துவின் வழியில் தொடர்ந்து செல்ல வேண்டியவர்களாய் இருக்கிறோம்.மீறி நடக்கும் போது வழிகாட்டும் பலகை சாய்ந்து போனால் பயனற்றுப் போவதைப் போல, நாமும் விழுந்து போக நேரிடும். அநேகருக்கு தங்களிடம் இருக்கும் குறைகளைப் பார்க்க நேரம் இருப்பதில்லை. ஆனால், வேதாகமம் ஒரு கண்ணாடியைப் போல நம்மிடம் இருக்கும் குறைகளைச் சுட்டிக் காட்டி திருத்திக்கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கிறது. இல்லையெனில், நாம் தேவ கோபத்திற்கு ஆளாக நேரிடும். அதனால் தான் வேதம் **இப்படியிருக்க சகோதரரே தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாத படிக்கு எச்சரிக்கையாய் இருக்கக் கடவன்** (I கொரி 10: 12) என்று எச்சரிப்பு செய்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் – சபை என்று பழைய ஏற்பாட்டில் (லேவி 19:2) பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போதுள்ள கிறிஸ்துவின் சபைக்கு முன் – அடையாளமாக இஸ்ரவேல் சபையார் இருக்கிறார்கள். நம் வசனக்குறிப்பான 1 கொரி 10 ம் அதிகாரத்தின் ஆரம்ப வசனங்களில் நாம் பார்க்கும் போது, இப்போதுள்ள ஞானஸ்நானத்திற்கு முன் அடையாளமாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் அவர்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் என்றும், இப்போது நாம் கர்த்தர் பந்தி அநுசரிப்புக்கு ஒப்பாக அவர்கள் ஒரே ஞான போஜனத்தை (மன்னா) மற்றும் ஒரே ஞான பானமாகக் கன்மலையின் தண்ணீரை குடித்தார்கள் அந்தகன்மலைக் கிறிஸ்துவே (Iகொரி10:4) அப்படியிருந்தும் அவர்களிடம் தேவன் அன்பாயிராமல் வனாந்திரத்தில் அழித்துப் போட்டார் என்று பார்க்கிறோம். அந்த தண்டனையே இன்று நமக்கு எச்சரிப்பாக உள்ளது.

எகிப்திலிருந்து விடுதலையாகி அவர்கள் வனாந்திரம் வந்து சேர்ந்தது, தற்போது நாம் பாவத்திலிருந்து விடுதலை ஆகி சபையில் சேர்க்கப்படுவதற்கு ஒப்பாயிருக்கிறது. அவர்களுக்கு கானான் தேசம் தேசம் வாக்களிக்கப்பட்டதை போல் நமக்கு பரமகானானாகிய பரலோகம் வாக்களிக்கப்பட்டுள்ளது. ஆனால், வனாந்திர வாழ்க்கையில் அவர்கள் நடந்து கொண்ட விதம் நம்மிடம் உள்ளதா என்று நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். முதலில் அவர்கள் இச்சித்தது போல நாமும் பொல்லாங்கான வைகளை இச்சிக்கக் கூடாது என்று வாசிக்கிறோம். இங்கு இறைச்சிக்காக அந்த ஜனங்கள் இச்சித்ததை தேவன் வெறுத்தார்..

காரணம் அதற்கு முன்பாக தேவன் அநேக அற்புதங்கள் செய்திருந்தும் இதை விசுவாசியாமல் போனார்கள். அது மாத்திரமல்ல, இந்த வனாந்திரத்தில் தேவனால் இறைச்சியை கொடுக்க முடியாது என்று எண்ணி அவர்கள் மோசேயிடம் வாதிட்டார்கள். ஆனால், தேவன் அவர்கள் நினைத்ததற்கு மாறாக திரளான காடைகளை வரவழைத்தார். அவர்கள் அதை புசித்த பின்பும் தாங்கள் தேவனை சந்தேகப்பட்டதற்காக வருத்தப்படவில்லை [சங் 78:30, 31] அதனால் தேவன் கோபம் கொண்டு வாதையினால் அவர்களை அழித்தார்.

அடுத்து, அவர்கள் புசித்துக்குடித்து விக்கிரக ஆராதனைக்காரராக மாறினார்கள் என்று வாசிக்கின்றோம். தேவனுடைய ராஜ்ஜியம் புசிப்பும் குடிப்புமல்ல, அது பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷம் என்று ரோமர் நிருபத்தில் காண்கிறோம். கிறிஸ்தவர்கள் உலக ஜனங்களைப் போல் பண்டிகைகளை கொண்டாடுவதில்லை. காரணம், அவர்கள் வேத வசனத்தால் வழி நடத்தப்பட்டு வாரந்தோறும் தேவனை கொண்டாடுகிறார்கள். உங்களுக்கு இருக்கிறவைகள் போதும் என்று எண்ணுங்கள், பண ஆசையில்லாதவர்களாய் நடவுங்கள், பொருளாசையாகிய விக்கிரக ஆராதனை என்று அப்போஸ்தலர் உபதேசம் நம்மை எச்சரிக்கின்றது. வேசித்தனம் பண்ணி ஒரே நாளில் 23,000 பேர் விழுந்து போனார்கள் இஸ்ரவேலர்கள். அது போல நாம் இருக்கக்கூடாது என்கிறார் பவுல். கிறிஸ்துவின் உபதேசம் ஒரு ஆத்துமாவை அற்புதமாக இரட்சித்து, பரிசுத்தப்படுத்தி சபையில் சேர்க்கிறது. ஆனால் கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகிய உலகக் காரியங்கள் அந்த ஆத்துமாவை கொள்ளைக் கொண்டு போகும் அபாயம் உள்ளது என்று மூப்பனாகிய யோவான் அப்போஸ்தலர் நம்மை எச்சரிக்கின்றார்.

பகலில் மேகஸ்தம்பம், இரவில் அக்கினி ஸ்தம்பம் வழி நடத்த, உணவுக்கு மன்னா, தாகத்திற்கு கன்மலைத்தண்ணீர் என்று தேவையான அனைத்தையும் தேன் தந்து போஷித்துக் காப்பாற்றினார். அதைப்போலவே, இப்போது நம்மையும் அதே தேவன் போஷித்துக் கொண்டிருக்கிறார். அதை மறந்து நாம் இஸ்ரவேல் ஜனங்களைப் போல் நடந்து கொள்வோம் என்றால் நம்மையும் தேவன் தண்டிப்பார். ஒருவேளை, அவர்களுக்கு நேரிட்டதைப் போல் அழிவு வாராமல் இருக்கலாம். ஆனால், ஆத்தும மரணம் அடைய நேரிடும் தேவ ஐக்கியம் தடைப்பட்டு, வேதத்திற்கு விலகி ஒருவேளை சபை ஐக்கியத்திலிருந்து விழுந்து போகும் நிலை கூட வரலாம். அதனால் தான் நிற்கிறேன் என்று எண்ணுகிறவன் ஒருவனும் விழுந்து போகாதபடி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.கிறிஸ்துவை பரீட்சை பார்த்து பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள் என வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டில் எப்படி

கிறிஸ்துவைப் பரீட்சை பார்த்திருக்க முடியும் (எண் 21:1:5,6) இங்கே ஜனங்களுக்கு **என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை தேவன்** எழும்பப் பண்ணுவார் என்று மோசே சொல்லி இருந்தார். ஆக, அவர்கள் மோசேக்கு விரோதமாகப் பேசியது கிறிஸ்துவுக்கு விரோதமாகப் பேசியதற்கு சமம். அதைத் தான் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் கிறிஸ்துவை பரீட்சை பார்த்து செத்தார்கள் என்கிறார். சபைக்கு வந்த பின் பழைய பாவ வாழ்க்கையே மேல் என்று யாராவது பேசினால் அவர்கள் பரீட்சை பார்ப்பவர்கள். அதே போல வசதி வாய்ப்புகள் குறைவு என்று முறுமுறுப்பவர்கள் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒப்பாயி ருக்கிறார்கள். அவர்கள் முறுமுறுத்தது போல நாமும் செய்யக் கூடாது. நாளைய தினத்தைக் குறித்து கவலைப்படாமல் தேவனுக்குரியவைகளை தேடப்பிரயாசப்படவேண்டும். இவ்வுலகம் விளம்பரங்களால் மக்களை ஏமாற்றி, இச்சையைத் தூண்டி ஆடம்பரமாக

அதில் கிறிஸ்தவர்களும் ஈர்க்கப்பட்டு நம் பரலோக சந்தோஷங்களை மறந்து, தேவன் நமக்கு செய்த ஆசீர்வாதங்களை மறந்து, பாவமன்னிப்பு, பரிசுத்தம் போன்ற உயர்ந்த நன்மைகளை அசட்டை செய்து வாழ்வோமானால் நாமும் விழுந்துவிடும் ஆபத்து உள்ளது. ஆகையால், அந்த மாதிரியின்படி ஒருவனாகிலும் கீழ்படியாமல் விழுந்து போகாதபடிக்கு நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம் (4:11).

சபை வாழ்க்கையில் நாம் கவனமாக நம்மைப் பார்த்துக் கொண்டால் தான் பரலோக வாழ்வுக்கு நம்மை தகுதிப்படுத்திக் கொள்ள முடியும். மற்றவர்களை குற்றவாளியாகத் தீர்க்கும் பரிசேயராய் இராமல் நம்மை சரிப்படுத்திக் கொள்ளும் கிறிஸ்துவின் சபை விசுவாசிகளாக விழாதபடிக்கு ஜாக்கிரதையாய் நடந்துக் கொள்வோம். தேவக்கிருபை நம்மனைவரோடும் கூட இருப்பதாக ஆமென். ★

## கிறிஸ்தவனின் தலையாய கடமைகள்

1. அழிந்து போகும் மக்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லுதல் (மாற்கு 16:15)
2. விழுந்து போன கிறிஸ்தவர்களை மீட்டமைத்தல் (யாக்கோபு 5:19,20)
3. ஏழைகளுக்கு உதவி செய்தல் (கலாத்தியர் 6:10)
4. தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்ளுதல் (தீமோத்தேயு 2:15).

# கிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவரா?

Bro. ஆறுமுகம்

**ம**த்தேயு 22:29 ல், இயேசு சதுசேயர்களிடம், ...நீங்கள் வேதவாக்கியங்களையும் தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங் கொள்ளுகிறீர்கள் என்று சொன்னார். பேதுரு தனது இரண்டாம் நிருபத்தில் வேதத்தில் உள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுய தோற்றமான பொருளையுடைய தாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது என்று குறிப்பிட்டார் (2 பேதுரு 1:20).

வசனங்களைத் தப்பான எண்ணம் கொண்டு போதிக்கும் தனித்துவக் கொள்கைக்காரர்கள் தங்கள் சுய தோற்றமான பொருளைத்தான் கொடுத்து சபையைக் குழப்பிக் கொண்டுள்ளனர். வேதத்தையும் சாட்சியாகமத்தையும் கவனிக்க வேண்டும். இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை என்றும், கர்த்தருடைய புத்தகத்தில் தேடி வாசியுங்கள்: இவைகளில் ஒன்றும் குறையாது: இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது: அவருடைய வாய் இதைச் சொல்லிற்று: அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும் என்றும் ஏசாயா குறிப்பிட்டார் (ஏசாயா 8:20;34:16) சாட்சியாகமங்களில் கவனம் செலுத்தமாலும், ஜோடி வசனங்களின் கருத்தை உணராமலும் தங்கள் மனதில் உள்ளதை கக்கிப் போடும் தனித்துவக்கொள்கைக்காரர்கள் திருந்த வேண்டும்.

I. **இவர்களின் குளறுபடிகளில் ஒன்று, 'இயேசு சிருஷ்டிக்கப்பட்டவர்' என்பது.**

இயேசு சிருஷ்டிக்கப்பட்டவராயின் அதற்கான சரியான வசன ஆதாரத்தை இவர்கள் நேரடியாக காட்டாதது ஏன்? இவர்களின் அடிப்படையான, அதே வேளையில் தவறான, கொள்கை கொலோசெயர் 1:15 லிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

அவர் தரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர் என்று பவுல் குறிப்பிடுகிறார். சர்வ சிருஷ்டிக்கும் முந்தி சிருஷ்டிக்கப்பட்டவர் என்று குறிப்பிடவில்லை. முந்தின பேறுமானவர், என்பது முதலில் சிருஷ்டிக்கப்பட்டவர் என்ற பொருளைத்தான் கொடுக்கிறது என்பதற்கான ஆதாரம் எந்த வசனத்தில் உள்ளது?

சிருஷ்டிப்பு என்றால் ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை உருவாக்குவது. ஆதி1:ல், உலகமும் அதிலுள்ள யாவும், வானமும் அதிலுள்ள யாவும் அப்படித் தான் சிருஷ்டிக்கப்பட்டது

(எபிரேயர் 11:3). லேவியானவன் ஆபிரகாம் அரையில் இருந்தது போல, கிறிஸ்து தேவனிடத்தில், தேவனின் அங்கமாக இருந்திருக்கிறார் என்று சொல்லும் இவர்கள் [ஒன்றுமில்லமையிலிருந்து] சிருஷ்டிக்கப்பட்டவர் என்றும் சொல்லுவது அபத்தமானது. முதற்பேறான அல்லது முந்தின பேறான என்பது திருமறையில் மூன்று விதமாக பொருள்படுத்துகிறது.

1. ஒரு தாய்க்கு முதலில் பிறக்கும் மனுஷன், பிராணிகளிடத்தில் முதலில் ஈனப்படும் குட்டிகள், செடி, கொடி, பயிர்களில் விடப்படும் காய் கனி மற்றும் தானியக் கதிர் இந்தப் பொருளையுடையது. மனுஷனுக்கு முதற்பேறானது ; மற்றவர்களுக்கு முதற்பலன்.

2. மிகக் தேர்ச்சியான, உயர்வான அந்தஸ்தை பொருள்படுத்துகிறது.

3. ஞானர்த்தமாக முதன்மையாக பிறப்பிக்கப்பட்டவை, புது சிருஷ்டி– மறு ஜென்மம், மறு பிறப்பு ஆகிய பொருள் கொண்டிருப்பது.

உதாரணமாக, யாத்திராகமம் 23:19 ல், விளைச்சலின் [முதற்பலனை] முதற்கனியை ஆலயத்திற்கு கொண்டு வருவாயாக என்று சொல்லப்பட்டுள்ளது. லூக்கா 2:23 ல் முதற்பேறான எந்த ஆண்பிள்ளையும் கர்த்தருக்கு பரிசுத்தமானது என்று சொல்லப்படுகிறது. இவர்கள் கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுக்கப்பட்டவர்கள் (யாத்.12:2,13). இரண்டாவதாக, இஸ்ரவேலர்களை முதற்பேறானவர்கள் என்று எண்ணாகமம் 3:41 ல் சொல்லப்படுகிறது. இதன் பொருள் உலகத்திலுள்ள எல்லா தேசத்தவர்களுக்கும் இவர்களே முதலில் பிறந்தவர்கள் என்பது பொருளல்ல. (சிருஷ்டிக்கப்பட்டவர்கள்) அப்படிச் சொல்லுவது மதியீனம். இவர்களுடைய முற்பிதா யாக்கோபு என்னப்பட்ட இஸ்ரவேல். இஸ்ரவேல் எனும் ஒரு தேசம் உண்டாதற்கு முன்பாகவே அவருக்கு அநதப் பெயர் கொடுக்கப்பட்டது (ஆதி.32:28). ஆனாலும் இஸ்ரவேல் தேசத்தார்களை தாம் சிருஷ்டிக்காக கர்த்தர் குறிப்பிடுகிறார் (ஏசாயா 43:1). மூன்றாவதாக இரட்சிக்கப்பட்டு தேவனுடைய சகல நியமங்களையும் கைக் கொண்டு கீழ்படிந்து பழைய, புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களின் தனித்துவ சிறப்பைக் குறிக்கும்பொருட்டு முதற்பேறானவர்களாகிய சர்வ சங்கம் என்று சபையைக் குறிப்பிடுகிறார் (எபிரேயர் 12:23).

இந்த மூன்றாவது கருத்துப்படி, இயேசு உலகிலிருக்கிற சகல சிருஷ்டிகளிலும், (சகல சிருஷ்டிகளைக் காட்டிலும்) முதன்மைத்துவம் வாய்ந்த தனிச் சிறப்பைப் பெற்றவர் என்பதே சரியான பொருள். ஏனெனில், எபிரேயர் புத்தகத்தின் மையக் கருத்தே இயேசு மேலானவர் என்பது தான். அவர் பரலோகத்தில் முந்தி பிறந்தவருமல்ல, சிருஷ்டிக்கப்பட்டவருமல்ல.

இயேசு உலகத்தில் மாம்சப் பிறப்பைப் பெறும் வரை, பரலோகத்திலிருந்தவரை, முதற்பேறானவராக வசனங்களில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. மரியாள் அவரைப் பெற்ற போது முதற்பேறானவர் என்று அழைக்கப்பட்டார் (மத்தேயு 1:25). அதற்குப் பின்பு மாம்ச வாழ்க்கையிலே யோசேப்பிற்கும், மரியாளுக்கும், இயேசுவிற்குப் பின், நான்கு ஆண்களும் சில பெண்களும் பிறந்தார்கள். அவர்களுக்கு அவர் (முன் பிறந்த) முதற்பேறானவர் (மத்தேயு 13:55,56). அநேகரை தேவனுடைய பிள்ளைகளாக்கும்படி மரித்து, உயிர்தெழுந்து, தமது இரட்சிப்பின் சுவிசேஷத்தின் மூலம் பிறந்த யாவருக்கும் ஆவிக்குரிய ரீதியில் (முன் பிறந்த) முதற்பேறானவர் இயேசு (எபிரேயர் 2:10; ரோமர் : 8:29). அவர் எல்லோருக்கும் முன்பு சிருஷ்டிக்கப்பட்டதினால் முதற் பேறானவரல்ல. ஆயினும், மரியாளிடத்தில் பிறந்தது அவருடைய ஆரம்பமல்ல ( வெளி 1:11).

II. 'முதற்பேறானவர்' என்பது முதல் பிறப்பதை மட்டும் குறிப்பதில்லை.

1. சங்கீதம் 89 ல் தாவீதை தேவன் மேன்மையாகப் பேசுவதை வாசிக்கிறோம். வசனம் 20 – ல் அவர், **என் தாசனாகிய தாவீதைக் கண்டுபிடித்தேன், என் பரிசுத்த தைலத்தினால் அவனை அபிஷேகம் பண்ணினேன்** என்று சொல்லிக்கொண்டே வந்து, வசனம் 27 ல், **நான் அவனை எனக்கு முதற்பேறானவனும், பூமியின் ராஜாக்களைப் பார்க்கிலும் மகா உயர்ந்தவனு மாக்குவேன்**, என்றார். தாவீது அவருடைய தகப்பன் குடும்பத்தில் எட்டாவது மகன். இவர் எப்படி முதற்பேறானவர் என்றழைக்கப்பட்டார்? முதற்பேறானவர் எனப்படுவதால் இயேசு முதலில் சிருஷ்டிக்கப்பட்டவர் எனில், தாவீது? அவரும் முதலில் சிருஷ்டிக்கப்பட்டவரா? (கொலோசெயர் 1:15).

– தொடரும் ★

## கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் மனிதனுடைய நிலை

1.தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு வெளியே இருக்கிறான் (எபேசியர் 1:3)

2.தேவனுக்கு சத்துருவாக இருக்கிறான் (யாக்கோபு 4:4)

3.ஜெபிக்கும் உரிமை இல்லாதவனாயிருக்கிறான்(நீதி 28:9)

4.நித்திய ஆக்கினைக்கு சுதந்திரவாளியாக இருக்கிறான் (மத்தேயு 25:46).

# உண்மையை அறிந்து கொள்ளுங்கள்

Bro. ஹென்றி மோகன்

**உ**லகத்தில் கோடி கோடியாக புத்தகங்கள் இருந்தாலும் மனிதன் அறிந்து கொள்ள வேண்டிய உன்னதமான உண்மைகளை அறிந்துக் கொள்வதற்காக உள்ள ஒரே புத்தகம் பரிசுத்த வேதாகமம் மட்டுமே. காரணம், வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (IIதீமோ 3:16). கர்த்தருடைய வார்த்தை உத்தமமும், அவருடைய செய்கையெல்லாம் உண்மையுமாயிருக்கிறது என்று தாவீது எழுதுகிறது (சங் 33:4). அந்த உண்மை குறித்து சாட்சி கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தேன், என்று இயேசு கூறுகிறார் (யோ 18:37), இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார் என்பதற்கு வரலாறு சாட்சி கொடுக்கிறது. அப்படியிருந்தும் பரிசுத்த வேதாகமத்தில் உள்ள உண்மைகள் மறைக்கப்பட்டும். பொய்யாக மாற்றப்பட்டும் உள்ளது என்றால் அதற்கு காரணம் பிசாசானவனே.

பிசாசு ஆதிமுதலே மனிதனை வஞ்சித்து வருகிறான். இந்த உண்மையை உணர்ந்து கொள்ளாத மனிதன் தன்னை உண்டாக்கின தேவனுடைய வார்த்தைகளுக்கு செவிசாய்க்காமல் தேவனால் சொல்லப்படாததும் பிசாசின் தூண்டுதலினால் சொல்லப்பட்டு வருகின்ற மனுஷனுடைய போதனைகளுக்கும், மாறுப்பாடான உபதேசங்களுக்கும், பாரம்பரியமான கட்டுக்கதைகளுக்கும் செவி சாய்ந்து நடப்பதினால் தள்ளை உண்டாக்கின தேவனாகிய கர்த்தருக்குஅந்நியராய் இருக்கிறார்கள் என்ற உண்மையை உணராமல் இருக்கின்றார்கள்.

ஆதியிலே தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார் (ஆதி2:16-17). ஆனால் பிசாசானவள் ஸ்திரியை நோக்கி : நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்று தந்திரமாகக் கேட்டிருப்பதை கவனியுங்கள். இப்பொழுது ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சகங்களில் கனிகளைப் புசிக்கலாம்: ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி நீங்கள் சாகவே சாவதில்லை என்று சொல்லி ஸ்திரீயை வஞ்சித்தது (ஆதி 3:1-4).

மனுஷன் தேவனால் உண்டாக்கப்பட்டவனாக இருந்தாலும், பிசாசானவனுடைய இச்சையின்படி நடக்க மனதாயிருப்பவர்களை அவன் தன்னுடையவர்களாக மாற்றி அவர்களுக்கு அவன் பிதாவாயிருக்கிறான். உண்மை அவனிடத்தில் இல்லாதபடியால் அவன் பொய்யனும் பொய்க்கு பிதாயுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான் (யோவான். 8:44). எனவே அவனுடையவர்களும் அவனைப் போலவே தேவனால் சொல்லப்பட்டிருப்பவைகளை மாற்றியும், மறைத்தும் தங்கள் சொந்தத்திலிருந்து எடுத்து பேசி வருகிறார்கள். இதுவே மனிதன் வேதாகமத்தில் அறிந்து கொள்ள வேண்டிய உன்னதமான உண்மைகள் மறைக்கப்பட்டும் மாற்றப்பட்டுமுள்ளதற்கும் காரணமாக உள்ளது. எனவே வேதாகமத்தை ஆராய்ந்து பார்த்தும் அறியாதவர்களிடத்தில் விசாரித்தும் உண்மைகளை அறிந்து கொள்ளுங்கள். உண்மை உங்களை அறியாமையிலிருந்து விடுவிக்கும்.

வேதாகமம் தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய புத்தகமாக பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரண்டு பகுதிகளாக உள்ளது. அந்த இரண்டு ஏற்பாடுகளைக் குறித்து பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் முலமாய் நமக்கு திருவுளம் பற்றினார்.... என்று விவரிக்கப்பட்டுள்ளது ( எபி 1:1-2) தேவனாகிய கர்த்தருடைய இந்த உன்னதமான திட்டத்தை குறித்து தீர்க்கதரிசியாகிய மோசேயின் மூலமாய் தேவன் உரைத்த தீர்க்க தரிசனம் என்னவென்றால்: உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக (பிதாக்களுக்காக) உன் சகோதரரிலிருந்து எழும்பபண்ணுவார் அவருக்கு அவருக்கு செவி கொடுப்பீர்களாக என்று (உபா 18:15).

மேலும், இந்த உன்னதமான திட்டத்தை குறித்து தேவனாகிய கர்த்தர் மோசேயை நோக்கி: உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் (பிதாக்கள்) சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன், நான் அவருக்கு கற்பிப்பதை எல்லாம் அவர்களுக்கு சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்கு செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன் என்று உரைத்திருக்கிறார் (உபா 18:18-19).

மேலும், இயேசு கிறிஸ்துவின் நாட்களில் பேதுருவோடும், யாக்கோபோடும், யோவானோடும், இயேசு பேசிக்கொண்டிருக்கையில் ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து

ஒரு சத்தம்உண்டாயிற்று (மத் 17:5) இயேசு நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடைய தாயிருக்கிறது என்றும் (யோவான் 14:24) நீங்கள் என் உபதசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீவுராயிருப்பீர்கள். உண்மையையும் அறிவீர்கள் உண்மை உங்களை விடுதலை யாக்கும் என்றார் (யோ 8:31,32).

தேவனாகிய கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் அருளின புதிய ஏற்பாட்டில் உள்ள தேவனுடைய வார்த்தைகளுக்கு தான் செவி கொடுக்க வேண்டுமென்றால் தீர்க்கதரிசிகள் மூலமாக பிதாக்களுக்கு அருளின பழைய ஏற்பாட்டில் உள்ள தேவனுடைய வார்த்தைகளைக் குறித்து வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள உண்மை என்ன?

இயேசு : மோசே நியாயப்பிரமாணத்தை உங்களுக்கு கொடுக்கவில்லையா? அப்படியிருந்தும் உங்களில் ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறதில்லை என்றார் (யோவான் 7:19). எனவே, ஒருவனும் நியாயப்பிரமானத்தை நிறைவேற்ற வில்லை. எப்படியெனில் ஒருவன் நியாயப்பிரமானத்தை முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான் என்ற யாக்கோபு எழுதுகிறார் (யாக் 2:10). எனவே, நியாயப்பிரமானத்திலேயே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது என்று பவுல் எழுதுகிறார் (கலா 3:11). எனவே, மனுஷன் ஒருவனாலும் நிறைவேற்ற முடியாமலிருந்த நியாயபிரமாணததை நிறைவேற்றும்படி தேவனாகிய கர்த்தர் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். ★

## நாளும் நடப்பும்

- பெட்ரோல், டீசல் விலை வரலாறு காணாத அளவு உயர்வு. பொதுமக்கள் கடும் அவதி.
- கோடிக்கணக்கான மதிப்புள்ள தங்க பாறைகள் ஆஸ்திரேலியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசு ஊழியர்களுக்கு இரண்டு சதவீத அகவிலைப்படி உயர்வு.
- ரஃபேல் போர் விமானம் இந்திய விமானப்படையின் போர்த்திறனுக்கு புதிய வலுவை அளிக்கும்.
- ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா பதினைந்து தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.